OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED

S. M.
FERNANDO
580, HOSPITAL ROAD
(Near Bank of Ceylon)
JAFFNA.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

கண் வைத்திய நிபுணர்கள்
சிபார்சு செய்யும்
கண்ணாடிகளை
சரியாக வழங்குபவர்கள்

எஸ். எம்.
பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 27 ஞாயிற்றுக்கிழமை (13 — 11 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 354

ஜனாதிபதி சந்திரிகாவின் 1ஆவது பேட்டி

# சமாதானப் பேச்சுக்கள் தொடரும்; கைவிடக் காரணம் எதுவுமே இல்லை

## சகல இன மக்களும் அமைதி முயற்சியை ஏற்றுள்ளனர்

கொழும்பு, நவம்பர் 13

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சு இடை நிறுத்தியே வைக்கப்பட்டுள்ளது. அதனைக் கைவிடுவதற்கான காரணம் எதுவுமே இல்லை. சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெறும்.

அரசு தொடங்கிய சமாதான முயற்சிகளை, வடக்கில் வாழும் 90 சதவீதமான மக்களும், கிழக்கில் வாழும் 85 சதவீதமான மக்களும் சிங்கள மக்களில் மிகப் பெரும்பான்மையானோரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்; அங்கீகரித்துள்ளனர்.

இவ்வாறு தெரிவித்தார் புதிய ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்கா.

ஜனாதிபதியாக நேற்று முற்பகல் பதவியேற்ற இரண்டு மணி நேரத்தில் அவர் தமது முதலாவது செய்தியாளர் மாநாட்டை நடத்தினார்.

கொழும்பு விசும்பாயாவில் நடைபெற்ற இந்த முதலாவது செய்தியாளர் மாநாட்டில் ஏராளமான உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்தியாளர்கள் கலந்து கொண்டனார்.

சமாதான முயற்சி, அரசின் பொருளாதாரக் கொள்கை, லஞ்சம், ஊழல், மோசடி ஆகியவை சம்பந்தமாக செய்தியாளர்கள் தொடுத்த கேள்விக்கணைகளுக்கு, சந்திரிகா சளைக்காது பதிலளித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள்—அரசு பேச்சுவார்த்தை கைவிடப்பட்டுவிட்டதா என்று செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சமாதானத்தைக் காணும் தனது அரசின் முயற்சிக்கு சகல இன மக்களிடம் இருந்தும் கிடைத்துள்ள ஆதரவு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என்ற தமது விருப்பத்தைப் பலப்படுத்தி உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சமாதானத்துக்கு விலை கொடுக்க முடியாது. பெரும்பான்மை சிங்கள மக்களினதும் ஏனைய இன மக்களினதும் கண்ணியத்தை விற்று சமாதானத்தைக் காணும் நோக்கம் எமது அரசுக்கு இல்லை — என்றும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்தார்.

அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையும், அரசி

(6ஆம் பக்கம் பார்க்க)



### ஜனாதிபதியின் செயலாளராக பாலபட்டபெண்டி

கொழும்பு, நவ. 13

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தனது செயலாளராக கே. பாலபட்டபெண்டியை நியமித்துள்ளார்.

சந்திரிகா குமாரதுங்கா நேற்று ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் அவர் வழங்கிய முதல் நியமனம் இதுவாகும்.

திரு. பாலபட்டபெண்டி சந்திரிகா குமாரதுங்கா பிரதமராக இருந்தபோதும் அவரது செயலாளராகப் பணியாற்றினார்.

அத்துடன் விடுதலைப்புலிக

(6 ஆம் பக்கம் பார்க்க)

### குடாநாட்டில் இம்மாதம் கூடிய மழை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், நவ. 13

இம் மாதத்தில் கடந்த 12 நாட்களில் மட்டும் அதிகளவு மழை வீழ்ச்சியாக 248.1 மில்லி மீற்றர் பதிவு செய்யப் பட்டுள்ளது.

இதேவேளை—கடந்த செப்டெம்பர் மாதம் முழுவதுமாக 82.9 மில்லி மீற்றர் மழையும் — ஒக்டோபர் மாதத்தில் 440.8 மில்லி மீற்றர் மழையும் பெய்துள்ளது.

திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் வானிலை அவதானிப்பு பிரிவில் இந்த விவரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(ஐ-4)

## சந்திரிகாவின் வற்புறுத்தலின் பின்னரே பிரதமர் பதவிக்கு ஸ்ரீமா இணங்கினார்

கொழும்பு, நவ. 13

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை பிரதமராகத் தெரிவு செய்வதற்கு முன் தாம் அவருடன் அது பற்றி ஆலோசனை நடத்தியதாகவும் அதன் பின்னரே அவர் அப்பதவியை ஏற்க இணங்கினார் என்றும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்தார்.

ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற பின்னர் நேற்று அவர் நடத்திய முதலாவது பத்திரிகையாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

தாயும், மகளும் நாட்டில் ஆட்சி செய்வது குறித்து செய்தியாளர்கள் அவரிடம் பல கேள்விகளைக் கேட்டனர்.

அவற்றுக்குப் பதில் அளித்த ஜனாதிபதி சந்திரிகா ''இந்த நிலை ஆட்சியில் குடும்ப ஆதிக்கத்தை ஒருபோதும் ஏற்படுத்தமாட்டாது'' என்றார்.

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்றும்—

பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் திகதியை தற்போது தெரிவிக்க முடியாது என்றும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார். (இ-ஐ-6)

## ஐ.தே.க. தலைவராக ரணில் பதவி ஏற்றார்

கொழும்பு, நவ. 13

எதிர்க்கட்சித் தலைவர் திரு. ரணில் விக்கிரமசிங்கா நேற்றுக் காலை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகப் பதவியேற்றார்.

ஸ்ரீ கோத்தாவில் இந்த நிகழ்ச்சி இடம்பெற்றது.

கட்சியின் பொதுச்செயலாளர் காமினி அத்துக்கோரள, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஐ.தே.க. உறுப்பினர்களும் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

திரு. ரணில் விக்கிரமசிங்கா ஐ.தே.கவின் 7ஆவது தலைவராவார். அவரது புதிய தலைமையின் கீழ் முதலாவது கட்சிக்கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

### ஊரடங்கு நேரம்குறைப்பு

கொழும்பு, நவ. 13

நேற்று மாலை 6 மணிக்கு அமுலுக்கு வந்த ஊரடங்குச் சட்டம் இன்று காலை 4 மணிக்கு நீக்கப் பட்டது.

மட்டக்களப்பு, அம்பாறையில்

## 50க்கும் மேற்பட்ட தமிழர்கள் கைது

யாழ்ப்பாணம், நவ. 13

கடந்த ஒருமாத காலத்தில் மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதிகளில் 50க்கும் மேற்பட்ட தமிழர்கள் ஸ்ரீலங்காப் படையினரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா இராணுவத்தினரும் பொலீஸ் அதிரடிப்படையினரும் இணைந்து நடத்திய பாரிய தேடுதல் நடவடிக்கையின்போது இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது படையினரின் தாக்குதலுக்குள்ளான 10க்கு மேற்பட்ட தமிழர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(இ-4)

இலங்கைக் கடலில்

## கொரிய நாட்டு கப்பல் தீயில் எரிந்து நாசம்

கொழும்பு, நவ 13

காலிதுறை முகத்திலிருந்து 24கிலோ மீற்றருக்கு அப்பால் தென்பகுதிக் கடலில் சென்று கொண்டிருந்த கொரிய நாட்டுக் கப்பல் ஒன்றில் தீ பற்றிக் கொண்டதாக அறிவிக்கப்படுகிறது;

''மொங்கோலியா'' என்ற அந்தக் கப்பலில் இருந்த 20 மாலுமிகளும் 6 அதிகாரிகளும் பாதுகாப்பாக உயிர் தப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கப்பலில் தீப் பிடித்துக் கொண்ட தகவல் உடனடியாகக் கொழும்பு கரையோர வானொலி நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து கொழும்பு துறைமுகத்தில் இருந்து ஆறு படகுகளில் விரைந்து சென்றதியணைப்பு படையினரால் கப்பலில் பற்றிக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மும்மொழிகளிலும் உறுதிமொழி கூறி ஜனாதிபதியாக சந்திரிகா பதவியேற்பு

இலங்கையின் மூன்றாவது ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று நான்காவது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா (வயது 49) நேற்று தமிழ் உட்பட மும்மொழிகளிலும் உறுதியுரை கூறி ஜனாதிபதியாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

கொழும்பு காலிமுகத்திடலில் உள்ள ஜனாதிபதி செயலகத்தில் (பழைய நாடாளுமன்றக் கட்டடத்தில்) பிரதம நீதியரசர் ஜி. பி. எஸ். டி. சில்வா முன்னிலையில் பதவியேற்பு நிகழ்ச்சி நேற்றுக் காலை 10-50 மணிக்கு ஆரம்பமாகியது.

சந்திரிகாவின் அமைச்சரவையில் இடம்பெற்ற அமைச்சர்கள், எம். பிக்கள், ஏனைய கட்சிப் பிரமுகர்கள், வெளிநாட்டு இராஜதந்திரிகள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் இந்நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

பதவியேற்பு வைபவம் மிக எளிமையானதாகவும், சுருக்கமானதாகவும் அமைந்தது.

திருமதி சந்திரிகா நீலப்பட்டுச் சேலை அணிந்து புன்னகைபூத்த வண்ணம் தலையை அசைத்து கூடியிருந்தவர்களுக்கு வணக்கம் தெரிவித்த வண்ணம் சபைக்குள் பிரவேசித்தார்.

சந்திரிகா பதவிஏற்பு வைபவத்துக்கு வந்தபோது அவருடன் அவரது மகளும் மகனும் கூட வந்தார்கள்.

ஜனாதிபதி சந்திரிகாவின் சத்தியப் பிரமாண வைபவத்தை சந்திரிகாவின் தாயார் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா பெருமிதத்

(6ஆம் பக்கம் பார்க்க)

## பலத்த பாதுகாப்புடன்நடந்த பதவியேற்பு வைபவம்!

கொழும்பு, நவ. 13

நாட்டின் மூன்றாவது ஜனாதிபதித் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட நான்காவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியான சந்திரிகா குமாரதுங்காவின் பதவியேற்பு வைபவத்தை ஒட்டி கொழும்பில் நேற்று பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

பதவியேற்பு வைபவம் நடந்த ஜனாதிபதி செயலகம் அமைந்துள்ள பழைய நாடாளுமன்றக் கட்டடத்தை நோக்கிச் செல்லும் பாதையில் நூற்றுக் கணக்கான பொலீஸார் நிறுத்தப்பட்டிருந்தனர்.

கடற்படையின் பீரங்கிப்படகு ஒன்று கடலில் அங்கும் இங்குமாக நகர்ந்து கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இருதரப்பும் ஏற்கும் தீர்வைக் காண அரசு உறுதியுடன் உழைக்கும்

### பதவி ஏற்றபின் சந்திரிகா

கொழும்பு. நவ. 13

பிரச்சினையில் ஈடுபட்டிருக்கும் இரு தரப்பினருக்கும் ஏற்புடையதான மரியாதை நிறைந்த சமதானத்தை ஏற்படுத்த எமது அரசு உறுதியுடன் உழைக்கும்.

— இவ்வாறு தெரிவித்தார் புதிய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா.

நேற்று ஸ்ரீலங்காவின் நான்காவது ஜனாதிபதியாகப்பதவியேற்ற பின்னர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார் அந்த உரையில் அவர் மேலும் கூறியதாவது:–

மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்வதற்கான சேவையில் என்னை அர்ப்பணிக்கப் போகிறேன்.

அச்சமும் பயமும் ஒழிக்கப்படும்; அதிகார துஷ்பிரயோகம் நீக்கப்படும்; நாட்டில் சமாதானம் ஏற்படுத்தப்படும்.

நாட்டில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்ற உன்னத இலட்சியத்தைக் கருத்திற் கொண்டு பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு இத்தகைய மகோன்னத வெற்றியை நாட்டு மக்கள் அளித்துள்ளார்கள்.

அவர்கள் அளித்த ஒவ்வொரு வாக்கும் மாற்றத்தைக் கோரிய வாக்காக இருந்தது.

முக்கியமாக வன்செயல்களும் அச்சம் நிறைந்த சூழ்நிலைகளும் நிராகரிக்கப்பட வேண்டும் என்று மக்கள் விரும்பியுள்ளனர். உணர்ச்சியற்ற படுகொலைகளையும் தங்களால் நேசிக்கப்பட்டவர்கள் கடத்திச் செல்லப்பட்டதையும் மௌனத்தைக் கடைப்பிடித்து அவர்கள் ஏற்றுக் கொண்டனர்.

#### அழிவுப்பாதை

மனித உயிருக்கு இருந்த மதிப்பு ஏறத்தாழ இல்லாது

(6ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதி சந்திரிகா தமிழில் ஆற்றிய உரை

ஜனாதிபதியாக நேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்துகையில் தமிழிலும் சில வார்த்தைகள் பேசினார்.

''சாதி, சமய, இன வேறுபாடு இன்றி என்மீது நம்பிக்கை வைத்து மிகப் பெரும்பான்மை வாக்குகளால் என்னை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தமைக்கு உங்கள் அனைவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றி. சுபீட்சம் பெற, சமாதானம் நிலவ ஒன்றுபட்டு உழைப்போம். எல்லோருக்கும் மும்மணிகளின் ஆசிகள் கிடைக்கட்டும்.''

இப்படி அவர் தமிழில் கூறினார். (இ-ஐ)

## ஆயிரத்து 200 கடன் பத்திரதாரருக்கு மாவீரர் வாரத்தில் மீட்புநிதி மீளளிப்பு

யாழ்ப்பாணம், நவ. 13

தமிழீழ மீட்பு நிதிக்குப் பங்களிப்புச் செய்தோரில் ஆயிரத்து 200 கடன் பத்திரதாரருக்கு எதிர்வரும் மாவீரர் வாரத்தில் மீட்பு நிதிக்கடன் மீளளிப்புச் செய்யப்படவுள்ளது.

கடனை மீளப் பெறத் தெரிவு செய்யப்பட்டுள்ளோரின் கடன் பத்திர இலக்கங்களை தமிழீழ நிதிப் பொறுப்பாளர் திரு. செ. தமிழேந்தி வெளியிட்டுள்ளார்.

தமிழீழ மீட்பு நிதிக்கு பங்களிப்புச் செய்தவர்களில் மாதாந்தம் தெரிவு செய்யப்பட்ட நூறு பேருக்கு கடன் மீளளிப்பு வழங்கும் திட்டப்படி —

ஒவ்வோர் ஆண்டும் ஆயிரத்து இருநூறு பேருக்கு மாவீரர் வாரத்தில் மீட்பு நிதிக் கடன் மீளளிக்கப்பட்டு வருவது தெரிந்ததே.

அதன்படி இந்த வருடமும் மாவீரர் வாரத்தில் ஆயிரத்து 200 பேருக்கு கடன் மீளளிப்புச் செய்யப்படுகிறது.

ஒவ்வோர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்தும் மாதாந்தம் கடன் மீளளிப்புக்கென இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை—

கடந்த 90, 91, 92, 93 ஆம் ஆண்டுகளில் மாவீரர் வாரத்தை ஒட்டி மீட்புநிதிக்

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்மட்டுவில் வேரற்கேணி
அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோயில்

## பாலஸ்தாபன விஞ்ஞாபனம்

நிகழும் மங்களகிரு பவ வருடம் ஐப்பசி மாதம் 29 ஆம் நாள் **14 — 11 — 94** திங்கட்கிழமை 10-30 முதல் 11-30 மணி வரை வரும் சுபவேளையில் சுப்பிரமணியப் பெருமானுக்கும் மற்றும் பரிவார தேவர்களுக்கும் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் செய்ய திருவருள் கூடியுள்ளது.

**13 — 11 — 94** ஞாயிற்றுக்கிழமை 9 மணிக்கு கணபதிஹோமம், வாஸ்துசாந்தி முதலியன.
மாலை 3மணிக்கு கும்பஸ்தாபனம், யாகபூஜை முதலியன.

**14 — 11 — 94** திங்கட்கிழமை 6மணி முதல் 8-30 மணிவரை எண்ணெய்காப்பு தொடர்ந்து யாகபூஜை, ஹோமம், பாலஸ்தாபன கும்பாபிஷேகம், புனருத்தாரண திருப்பணி நிதியை பொதுமக்கள் ஆரம்பித்து வைத்தல்

முகூர்த்த நிர்ணயம் அருளாசி
நியாய சிரோன்மணி சிவப்பிரம்மஸ்ரீ
**கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்**

பிரதமகுரு சிவாகம கிரியா தத்துவநிதி
சிவப்பிரம்மஸ்ரீ
**ச. சோமாஸ்கந்தக்குருக்கள்**
(ஆலய பிரதமகுரு)

அடியவர்கள் வந்து தரிசித்து ஆறுமுகன் அருள் பெறுக.

இவ்வண்ணம்;
ஆறுமுகன் அருள் கொண்டு
— பரிபாலனசபை.

வேரற்கேணி,
மட்டுவில் தெற்கு. [33748]


# உணவு முத்திரைக்கு தருவிக்கப்பட்ட
# விற்றாமில்க் பால்மா பெருமளவில் தேக்கம்

யாழ்ப்பாணம், நவ. 13
சமூக சேவை திணைக்களத்தால் வழங்கப்பட்ட — மேலதிக உணவு முத்திரைக்கு விநியோகிக்கவென எடுத்து வரப்பட்ட — "விற்றாமில்க்" பால்மா தேங்கிக் கிடப்பதாக தெரியவந்தது.

சமூக சேவைத் திணைக்களம் யாழ். மாவட்டத்தில் உள்ள போஷாக்கற்ற சிறார்களுக்கும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் பால்மா வழங்கும் நோக்குடன் 50 ரூபா பெறுமதியான உணவு முத்திரைகளை யாழ். மாவட்டத்தில் வழங்கியிருந்தது.

இந்த முத்திரைக்கு வழங்கவென கொழும்பில் இருந்து 834 பெட்டிகளில் 20 ஆயிரம் விற்றாமில்க் பால்மா பக்கட்டுகள் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டிருந்தன.

கடந்த ஆகஸ்ட் மாதம் எடுத்து வரப்பட்ட இந்த மாவை பெறுவதற்கு 50 ரூபா பெறுமதி முத்திரையுடன் 12 ரூபாவும் செலுத்த வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டது.

ஆனால் 62 ரூபாவுக்கு இந்த மாவை பெறுவதிலும் பார்க்க தாம் கூடிய வேறு மாவை குறைந்த விலையில் பெறலாம் என்று கருதிய மக்கள் விற்றாமில்க்கை பெறாமல் மின்னடித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் பருத்தித்துறை உணவுக் களஞ்சியத்தில் 250 பெட்டியும், யாழ். உணவுக் களஞ்சியத்தில் 131 பெட்டியும் விற்றாமில்க் பெட்டிகள் தேங்கிக்கிடப்பதாகத் தெரிய வந்தது.

இதே வேளை—
இந்த பால் மாவை அனுப்பிய மில்க்வூட் கம்பனி அதற்கான பணத்தை தருமாறு யாழ். செயலகத்தை வற்புறுத்தி வருவதாகத் தெரிகிறது.

இந்தப் பால்மா நீண்டகாலமாக தேங்கிக் கிடப்பதால் அது பழுதடையக் கூடும் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது. (உ-3)

## உணவு முத்திரை வழங்கல் குறித்து அரசின் முடிவு

கொழும்பு, நவ. 13
வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தபோது உணவு முத்திரைகளை பெற்று வந்த குடும்பங்களுக்கு, அவர்கள் மீளக் குடியமர்த்தப்பட்ட பின்னர் மீண்டும் உணவு முத்திரை வழங்குவதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இத்துடன் — இந்தியாவில் அகதிகளாக இருந்த பின் திரும்பி வந்துள்ள குடும்பங்கள் —
வடக்கிலும் கிழக்கிலும் நிலவிய குழப்பநிலைமை காரணமாக முன்னர் உணவு முத்திரைகள் பெறமுடியாதிருந்தவர்கள் —
புதிதாக இனங் காணப்பட்ட வறிய குடும்பங்களைச் சேர்ந்தோர் —
ஆகியோருக்கும் உணவு முத்திரைகள் வழங்குவதென அரசு தீர்மானித்திருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (உ-எ)

அரசு - புலிகள்

## சமாதானப் பேச்சுக்கு ஐ. தே. க. உதவி வழங்கும்

### அஸ்வர் தெரிவிக்கும் நம்பிக்கை

"விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் நடக்கும் சமாதானப் பேச்சுக்களுக்கு ஐ.தே.க. நிச்சயம் உதவி வழங்கும்."
— ஐ. தே. க அரசில் பிரதி அமைச்சராக இருந்த அஸ்வர் மேற்கண்டவாறு பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;-
எமது ஜனாதிபதி வேட்பாளராக இருந்த காமினி கூட இதை திட்டவட்டமாகக் கூறியிருந்தார்.

சமாதானத்துக்கு பங்கம் ஏற்படத்தக்கதாக கூட்டங்களில் பேசக் கூடாது என்று அவர் கூறுவார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் உருவாவதற்கு ஜே.ஆருடன் இணைந்து செயற்பட்ட முக்கியஸ்தர்களில் அவரும் ஒருவர்.

இந்திய நாட்டின் ஒத்துழைப்பையும், சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பையும் பெற்றுத்தான் இந்தப் பிரச்சினைக்கு சமாதான தீர்வு காணலாம் என அவர் நம்பியிருந்தார்.

சமாதானத்துக்காக அன்று பாடுபட்டோம். தொடர்ந்து பாடுபடுவோம். — என்றார்.

## "திரிசதி அர்ச்சனைகள்" வெளியீடு

யாழ்ப்பாணம், நவ. 13
பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா (கோப்பாய் சிவம்) தொகுத்த "திரிசதி அர்ச்சனைகள்" நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலயத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெறும் விழாவில் பிரம்மஸ்ரீ சி. சுப்பிரமணிய சாஸ்திரிகள், சிவஸ்ரீ ஸ்கந்தசாம்பசிவக் குருக்கள் ஆகியோரின் ஆசியுரைகளும், நல்லை ஆதீன முதல்வரின் அருளுரையும், சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள், பேராசிரியர் அ. சண்முகதாஸ், துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோரின் பாராட்டுரைகளும், கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர், பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா ஆகியோரின் சிறப்புரைகளும் இடம்பெறும்.

அமரர் பா. சாமிரெட்ண சர்மா நினைவாக இந்நூல் வெளியிடப்படுகின்றது. (க)

## காலநிலை சீரின்மையால்
## பொருள் இறக்கும் வேலை பருத்தித்துறையில் பாதிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 12
பாதகமான காலநிலை காரணமாக பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலை கடந்த இரு நாட்களாக தடைப்பட்டிருக்கிறது.

மாவை இறக்குவதற்காக காங்கேசன்துறையில் இருந்து பருத்தித்துறைக்கு வந்த 'கோமாரி' கப்பல் கடற்கொந்தளிப்புக் காரணமாக மாவை இறக்காமலேயே திரும்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை அத்தியாவசியப் பொருள்களுடன் வடக்கே வந்த 'ஹரண' கப்பல் காங்கேசன்துறையில் தொடர்ந்து தரித்துள்ளது. கொழும்பில் இருந்து புறப்பட்ட 'மாஹோ' கப்பல் திருமலையில் தரித்து நிற்பதாகவும் அறியவந்தது. (ஐ-3)

## மாவீரர்நாள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 13
வலிகாமம் கிழக்கு, வலிகாமம் மேற்கு வலயங்களில் உள்ள சகல விளையாட்டுக் கழகங்களின் நிர்வாக உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கன்னாகம் வலிகோட்ட அரசியல் துறைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

சகல விளையாட்டுக்கழக நிர்வாகிகளையும் அதில் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுள்ளது. (இ)

## ஆலயங்களில்

கன்னாகம் ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் தேவஸ்தானத்தில் இன்று ஞாயிறு காலை 6 மணி முதல் ஏகதின இலட்சார்ச்சனையும் நாளை மணவாளக் கோலசங்காபிஷேகமும் நடைபெறும்.

## பிணையில் விடுவிப்பு

கடந்த நாடாளுமன்ற தேர்தலின் போது பொ. ஐ. மு. ஆதரவாளர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த — முன்னாள் ஐ. தே. க. அமைச்சர் போல் பெரேராவின் மகனான— ஹரோல்ட் பிரசாத் பெரேராவை மேன் முறையீட்டு நீதிமன்றம் பிணையில் விடுதலை செய்தது. (உ-எ)


காரைநகர்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையுள்ளது)
374, மானிப்பாய் வீதி — யாழ்ப்பாணம்

முக்கிய அறிவித்தல்
## வருடாந்த பொதுக் கூட்டம்

மேற்படி கூட்டம் பொதுச்சபை உறுப்பினர்கள் பலரின் வேண்டுகோளுக்கு இணங்க 17-11-1994இல் நடைபெறமாட்டாது. கூட்டத்திற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

க. நடராசா
செயலாளர்

12-11-1994 (சி/9667)



**CHRISTMAS CAKES DEMONSTRATION**
நத்தார் காலத்துக்கான
கேக் செய்முறைகள்

1. றிச் கேக் (Rich Cake)
2. லவ் கேக் (Love Cake)
3. லைட் புருட் கேக் (Light Fruit Cake)
4. ஆமன் சீஸ் கேக் (Almond Cheese Cake)

காலம்: **20 — 11 — 1994** ஞாயிற்றுக்கிழமை
குறிப்பிட்ட எண்ணிக்கையானோர் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட இருப்பதால், 17-11-1994 க்கு முன் தொடர்பு கொள்ளவும்.

யோகி
## ஹோம் சயன்ஸ் அக்கடமி
71, நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
[33726]


## கடும் மழையினால் கிழக்கில் பெருவெள்ளம்!

### ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்வு

கொழும்பு, நவ. 12
தொடர்ந்து பெய்த பலத்த மழை காரணமாக கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

அம்பாறை மாவட்டத்தில் மட்டும் சுமார் 10 ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும், பொது இடங்களிலும் தஞ்சமடைந்துள்ளன.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலர் உணவுப் பொருள்களை விநியோகிக்க உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நிவாரண வேலைகளைத் துரிதமாக மேற்கொள்ளுமாறு புனர்வாழ்வு புனரமைப்பு, துறைமுகங்கள் கப்பல் போக்குவரத்து அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

## சைவசமயபாடப் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 13
காரைநகர் மணிவாசகர் சபை ஆண்டு தோறும் நடத்தும் சைவசமய பாடபரீட்சை இன்று ஞாயிறு காலை 8மணி தொடக்கம் ஒரு மணி வரை காரைநகர் பாடசாலைகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது. ஆண்டு 3 தொடக்கம் ஆண்டு 11 வரை கல்வியிலும் சுமார் ஆயிரம் மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். (எ)

## கட்டுப்பணம் இழந்த நான்கு வேட்பாளர்கள்

கடந்த புதன்கிழமை நடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டவர்களில் நான்கு வேட்பாளர்கள் தங்கள் கட்டுப்பணத்தை இழக்கின்றனர் என்று தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மொத்தமாக அளிக்கப்பட்ட வாக்குகளில் எட்டில் ஒரு பங்கை இவர்கள் பெறாத காரணத்தினால் அவர்கள் செலுத்திய கட்டுப்பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சுயேச்சை வேட்பாளர்களான ஏ. ஜே. ரணசிங்க, ஹட்சன் சமரசிங்க, சிங்கள சம்மந்த பூமி புத்ரகட்சி வேட்பாளர் ஹரிச்சந்திர விஜேதுங்க, ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி வேட்பாளர் நிஹால் கலப்பதி ஆகிய நால்வருமே கட்டுப்பணத்தை இழக்கின்றனர்

## நாடாளுமன்ற ஆணையர் சட்டம் திருத்தப்படுகிறது

கொழும்பு, நவ 18
நாடாளுமன்ற நிர்வாக ஆணையாளர் அதிகார சட்டம் திருத்தப்படவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இதற்கான திருத்தச்சட்ட மூலம் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஒருவர் அரச ஊழியர் அல்லது கூட்டுத்தாபன ஊழியரால் தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதாக ... அதிகாரிக்கு முறைப்பாடு செய்ய முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட ஊழியர்களினால் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டிருப்பதாக அல்லது அநீதி இழைக்கப்பட்டிருப்பதாக முறைப்பாட்டில் வெளியாகியிருப்பதாய் ஆணையாளர் அதிகாரி கருதும் பட்சத்தில், அவர் அது பற்றி விசாரித்து குற்றச் சாட்டு ... பார் என்றும் தெரிவிக்கப்பட ...


# G.C.E. O/L 94
மாதிரி பயிற்சி வினாத்தாள்கள்
(விடைகளுடன்)

★ கணிதம் ★ விஞ்ஞானம் ★ தமிழ்
★ சமூகக்கல்வி ★ ஆங்கிலம் ★ சமயம்
★ வர்த்தகம் ★ விவசாயம் ★ சித்திரம்
★ நடனம் ★ சங்கீதம்
★ மனைப்பொருளியல்

ஆகிய பாடங்களுக்கான மாதிரி பயிற்சி வினாத்தாள்கள்
யாழ். **BOND**
நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

கிடைக்குமிடங்கள்:

| | | | |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | — BOND | புத்தக | நிறுவனம் |
| | — பூபாலசிங்கம் | " | " |
| | — மக்மிலன் | " | " |
| | — மண்டேலா | " | " |
| | — ஸ்ரீவாலாம்பிகா | " | " |
| கன்னாகம் | — துர்க்கா | " | " |
| நெல்லியடி | — சிதம்பரப்பிள்ளை | " | " |
| பருத்தித்துறை | — கமலா | " | " |
| சாவகச்சேரி | — ஆசீர்வாதம் | " | " |
| கொடிகாமம் | — அருள்தாயகி | " | " |
| பளை | — செல்லையா | | |

ஆகிய புத்தக நிறுவனங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
[8014]



G. C. C.
வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையம்
514/14, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(பழைய O. P. D. முன்பாக)

கண், காது, மூக்கு, தொண்டை (E. N. T.), முறிவு, மகப்பேறு, சத்திரசிகிச்சை சிறுபிள்ளைகளுக்குரிய வைத்தியம், சருமநோய்கள் என்பவற்றிற்கு விசேட வைத்திய நிபுணர்களினால் ஆலோசனை வழங்கப்பட்டு வருகின்றது. இத்துடன் மருத்துவ ஆய்வுகூட சேவைகளும் (E. C. G.) இங்கு நடைபெறுகின்றன.

— நிர்வாகி.
[33747]



1-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 29 - 12 - 1975

உதிர்வு: 13 - 11 - 1993

குழந்தைவேலு சத்தியேந்திரா
(2ம் லெப். சிவகுமாரன்)

கொஞ்சு தமிழ் விஞ்சி நிற்கும்
மஞ்சு புகழ் தமிழீழமதில்
எஞ்சி நிற்கும் தமிழ் மக்கள்
கெஞ்சி நிற்கும் உயிர் காக்க
தானைத் தளபதி படையணி சேர்ந்து
தாரணி புகழச் சமர்க்களம் பலகண்டு
தமிழன்னை மடியினிலே சத்தியேந்திரா
சரித்திரமானாய் பூநகரியதனில்
தமிழ்த்தாய் மண்ணில் உதிரம் நீ சிந்த
குழந்தையுடன் நாம் கண்ணீர் சிந்தினோம்
காவியம் படைத்து களப்பலியான
சிவகுமாருக்கு எமது இதயாஞ்சலிகள்
என்றென்றும் உன் நினைவுடன் கூறுபவர்கள்.

சமநல சேவை திணைக்கள,
சமநல சேவை நிலைய
சமந்தொழிற் காப்புறுதிச் சபை,
விவசாய விஸ்தரிப்பு சேவை
உத்தியோகத்தர்கள்.

சமநல சேவை நிலையம்,
நல்லூர்.



உ
சிவமயம்

★ விவாஹ சுபமுகூர்த்த அழைப்பு ★

அன்புடையீர்!
சுவஸ்தி ஸ்ரீ நிகழும் பவ வருஷம் ஐப்பசி மாதம் 28ஆம் திகதி (14-11-1994) திங்கட்கிழமை உத்தரட்டாதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுப வேளையில் காலை 10-30 மணி முதல் 12-00 மணி வரை உள்ள தனு லக்கின சுப முகூர்த்தத்தில்

எமது புத்திரன்
சிரஞ்சீவி
சுந்தரேஸ்வரசர்மா
அவர்களுக்கும்

எமது புத்திரி
சௌபாக்கியவதி
மீனலோஜினி
அவர்களுக்கும்

மணமகளில்லத்தில் கன்னிகாதான, திருமாங்கல்யதாரண பாணிக்கிரகணஞ் செய்து கொள்ளத் திருவருள் துணை கொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணமும், அன்று அதிகாலை 6 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும் சமாவர்த்தனத்திலும் அன்று மாலை 3.00 மணியளவில் நடைபெறும் தாவரகிரகப் பிரவேசத்திலும் தாங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து தம்பதிகளை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

கதிர் செல்லப்பா குருக்களும்
குடும்பத்தினரும்
(மணமகனின் பெற்றோர்)
ஐயனார் வீதி,
சண்டிலிப்பாய்.

கணேசசிவசண்முகசர்மாவும்
குடும்பத்தினரும்
(மணமகளின் பெற்றோர்)
23, விதானையார் வீதி,
கொழும்புத்துறை யாழ்ப்பாணம்.
(7807)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கோலாவில் அரச படைகள் நடத்தும் தாக்குதல்களால்

# சமாதான ஒப்பந்தம் மீண்டும் கேள்விக்குறி!

## யுத்த நிறுத்தத்துக்கு முன் யுனிட்டா இயக்கத்தின் கோட்டையை வீழ்த்துவதற்கு அரசபடைகள் முயற்சி

அங்கோலாவில் உள்நாட்டு யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் — அதாவது அரசாங்கமும் ''யுனிட்டா'' இயக்கமும் கடந்த வாரம் ஸாம்பியாவின் தலைநகரான லுசாக்காவில் நகல் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டதன் மூலம் தீர்வு ஒன்றை நோக்கி மிகவும் நெருங்கி வந்தன.

இந்த நகல் ஒப்பந்தம் காரணமாக 20 வருடகால உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வரும் அறிகுறிகள் தென்பட்டிருந்தன.

கடந்த மாத இறுதியில் 31-10-94 லுசாக்காவில் நகல் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இரு தரப்பினரும் கடந்த வியாழனன்று (10-11-94) மீண்டும் சந்தித்துப் பேச இருந்தனர்.

இரு தரப்பினரும் ராணுவ மட்டத்தில் நடைபெறவிருந்த அப்பேச்சில் யுத்த நிறுத்தம் பற்றி ஆராயப்பட இருந்தது. நவம்பர் 15ஆம் திகதி சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தாகி 48 மணி நேரத்தில் யுத்த நிறுத்தம் செய்வது என நகல் ஒப்பந்தத்தில் இணக்கம் காணப்பட்டிருந்தது.

எதிர்வரும் 15ஆம் திகதி (15-11-94) அங்கோலா அரசாங்கத்தின் சார்பில் அங்கோலா அரசின் ஜனாதிபதி யோஸ் எட்வார் டோடொஸ் சாண்டொராஸும் (Jose Eduardodos Santos) யுனிட்டா இயக்கம் சார்பில் அதன் தலைவர் ஜோனஸ் சாவிம்பியும் (Jonas Savimbi) லுசாக்காவில் சந்தித்து, இறுதி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட இருந்தனர்.

ஆனால் யுனிட்டா இயக்கம் ஏற்கனவே லுசாக்கா மாநாட்டில் இணங்கியதுக்கு மாறாக கடந்த வியாழனன்று நடைபெற இருந்த ராணுவ மட்டப் பேச்சுக்களில் கலந்து கொள்ள மறுத்து விட்டது. அரசாங்க படைகளின் தாக்குதல் நிறுத்தப்படாத பட்சத்தில் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இறுதி ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடுவதற்கு தான் தயார் இல்லை என்றும் யுனிட்டா தற்போது கூறுகிறது.

### சமாதான முயற்சி குழம்ப காரணம் என்ன?

யுனிட்டா இயக்கம் கடந்த 31ஆம் திகதி சமாதானத்துக்கான நகல் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு விட்டு, அதன் மை காய முன்னரே ஒப்பந்தத்தைக் குழப்பும் நடவடிக்கையில் இறங்கியதுக்கு, நகல் ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் அரசாங்கப் படைகள் நடத்தும் மிகப் பெரிய அளவிலான தாக்குதலே காரணம் எனலாம்.

யுத்த நிறுத்தத்துக்கு முன் யுனிட்டா இயக்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை முடியுமான அளவு மீட்பதே அரசாங்கத்தின் திட்டமாகி இருக்கிறது.

யுனிட்டா இயக்கத்தின் பலம் வாய்ந்த கோட்டையாகக் கருதப்பட்டு வந்த குவாம்போ (Huambo) மாகாணம் மீதே அரச படைகள் பெரும் அளவில் தாக்குதல் தொடுத்துள்ளன.

குவாம்போவில் இருந்து நான்கு லட்சம் மக்கள் வெளியேறிவிட்டனர். 50க்கும் மேற்பட்ட உதவி வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் அவசரம் அவசரமாக வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

கடந்த 12 மாதமாக லுசாக்காவில் நடைபெற்று வந்த சமாதானப் பேச்சுக்களில் இரு தரப்பினருக்கும் இடையில் தடங்கல் ஏற்படுவதற்கு குவாம்போ மாகாணமும் காரணமாக இருந்தது.

அங்கோலாவின் 18 மாகாணங்களில் ஒன்றான குவாம்போ மாகாணத்தின் கவர்னர் பதவியை யுனிட்டா இயக்கம் கோரி இருந்தது. அரசாங்கம் எதிர்ப்புத் தெரிவித்திருந்தது.

### லுசாக்கா மாநாடு

யுனிட்டா இயக்கத்துக்கும் (Unita—the National Union for the Total Independence of Angola) அரசாங்கத்துக்கும் இடையில் கடந்த 12 மாதகாலமாக லுசாக்காவில் நடைபெற்ற பேச்சுக்கள் பெரும் இழுபறிகள் மத்தியிலேயே நடைபெற்று வந்தன.

ஐ. நா. வினால் ஏற்பாடு செய்யப்பட்ட பல நாடுகளைச் சேர்ந்த 80 பேர் கொண்ட குழு ஒன்று இரு தரப்பினரையும் லுசாக்காவுக்கு அழைத்து இப்பேச்சுவார்த்தையை நடத்தி வந்தது.

இந்தக் குழு ஐ. நா. — அங்கோலா உண்மை காணும் குழு (U.N. — Angola Verification Mission) என்று அழைக்கப்பட்டது.

போர்த்துக்கல், அமெரிக்கா, ரஷ்யா ஆகிய மூன்று நாடுகளின் பிரதிநிதிகளும் லுசாக்கா மாநாட்டில் மேற்பார்வையாளர்களாகக் கலந்துகொண்டனர்.

எட்டப்படும் எந்த ஓர் ஒப்பந்தத்துக்கும் இந்த மூன்று நாடுகளுமே உத்தரவாதம் அளிக்கவேண்டும் என்பது ஐ. நா.வினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

லுசாக்கா மாநாடு கடந்த ஜூலை மாதம் ஒரு தீர்வுத் திட்டத்தைத் தயாரித்து யுனிட்டா இயக்கத்தினரும்— அரசாங்கத் தரப்பினரும்— அங்கீகாரத்துக்காக விட்டிருந்தது. அரசாங்க தரப்பினர் உடனடியாக அதனை ஏற்றுக்கொண்டனர்.

ஆனால் யுனிட்டா ஏற்க மறுத்துவிட்டது.

தீர்வுத் திட்டத்தை ஏற்பதற்கு ஐ. நா. அப்போது ஒரு மாதகால காலக்கெடுவிதித்தது.

இந்த ஒரு மாதகாலத்துக்குள் தீர்வுத்திட்டத்தை ஏற்க மறுத்தால் யுனிட்டா இயக்கம் மீது தடைகளைக் கொண்டுவரப்போவதாக ஐ. நா. அறிவித்தது.

ஆனால் யுனிட்டா இயக்கம் சலுகைகளை விட்டுக்கொடுப்பதில் தொடர்ந்து பிடிவாதம்காட்டிவந்தது.

கடந்த மாதம் 31ஆம் திகதி லுசாக்காவில் சமாதானத்துக்கான நகல்திட்டம் ஒன்றில் யுனிட்டா கைச்சாத்திடும்வரை லுசாக்கா சமாதானப்பேச்சுக்கள் பெரும் இழுபறிகளையும் நெருக்கடிகளையும் கண்டிருந்தது.

எதிர்வரும் 15ஆம் திகதி கைச்சாத்தாக இருந்து—தற்போது குழப்ப நிலையில் இருந்துவரும் ஒப்பந்தம் கடந்த மூன்று வருட காலத்தில் யுனிட்டா இயக்கத்துக்கும் அரசாங்க தரப்புக்கும் இடையிலான இரண்டாவது ஒப்பந்தம் ஆகும்.

### குழம்பிப்போன 1991 ஒப்பந்தம்

அங்கோலா உள்நாட்டு யுத்தத்துக்குத் தீர்வு காண்பதற்காக 1991ஆம் ஆண்டும் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. ஆனால் யுனிட்டா இயக்கம் மீண்டும் ஆயுதம் ஏந்தியதை அடுத்து ஒப்பந்தம் குழம்பியது.

யுனிட்டா இயக்கத்துக்கும் அரசதரப்பினருக்கும் இடையிலான 1991 சமாதானப் பேச்சுக்கள் போர்த்துக்கலில் நடைபெற்றன.

இரு தரப்பினரும் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டு ஐ. நாவின் மேற்பார்வையின் கீழ் 1992 செப்ரெம்பரில் அங்கோலாவில் பொதுத் தேர்தலும் நடத்தப்பட்டது.

பொதுத் தேர்தலில் யுனிட்டா இயக்கம் தோல்வி கண்டதும், தேர்தல் முடிவை அது ஏற்க மறுத்தது.

அரசாங்கம் மோசடிசெய்து தேர்தலில் வென்றதாக யுனிட்டா குற்றஞ்சாட்டி மீண்டும் ஆயுதங்களைத் தூக்கியது.

ஒரு வருடத்துக்கு முன்னர் ஐ. நாவின் ஏற்பாட்டில் மீண்டும் லுசாக்காவில் மாநாடு ஆரம்பமாகும் வரை எந்த வித சமரச முயற்சிகளும் உருப்படியாகப் பயன் அளிக்கத் தவறி இருந்தன.

### 20 வருட கால உள்நாட்டு யுத்தம்

ஆபிரிக்காவின் தென்பகுதியில் அமைந்துள்ள கறுப்புஇன மக்களின் நாடான அங்கோலா நீண்டகாலமாக போர்த்துக்கலின் கீழ் ஒரு குடியேற்ற நாடாக இருந்தது.

வலது சாரிப் போக்குடைய யுனிட்டா இயக்கமும் இடதுசாரிப் போக்குடைய எம்.பி.எல். ஏ. (M.P.L.A) என்று அழைக்கப்படும் அங்கோலா விடுதலை இயக்கமும் (Popular Liberation Movement of Angola) போர்த்துக்கல் ஆட்சியை எதிர்த்துப் போராட்டம் நடத்தின.

1975 ஆம் ஆண்டு போர்த்துக்கலிடம் இருந்து அங்கோல சுதந்திரம் பெற்றவுடன் இடதுசாரி இயக்கமான எம்.பி.எல்.ஏ. இயக்கம் ஆட்சியை பிடித்துக் கொண்டது. எம்.பி.எல்.ஏக்கு ஆதரவாக கியூபா அரசு 40 ஆயிரம் படையினரை அங்கோலாவுக்கு அனுப்பியது.

சில ஆண்டுகளுக்கு முன்னர் கியூபா தனது படைகளை விலத்திக் கொள்ளும் வரை தென் ஆபிரிக்காவின் வெள்ளையர் ஆட்சி மற்றும் வலதுசாரிச் சக்திகளின் ஆதரவைத் திரட்டி யுனிட்டா அதிகாரத்தைக் கைப்பற்ற போராட்டம் நடத்தியது.

ஆனால் ஆட்சியைப் பிடிக்க முடியவில்லை.

இப்படியான நிலை

**வெளி உலகில்**

யிலேயே ஐ. நாவின் தலையீடும் சமாதானப் பேச்சுக்களும் நடைபெற்றன.

### பொருளாதாரம் சீரழிவு

போர்த்துக்கலின் ஆட்சிக் காலத்தில் அங்கோலா ஆபிரிக்காவில் செல்வந்த நாடுகளில் ஒன்றாக இருந்தது.

வைரம், கோப்பி, எண்ணெய் வளம் கொண்ட நாடு அது.

உலகிலேயே சிறந்த ரக கோப்பி ஏற்றுமதி செய்யும் முன்னணி நாடுகளில் அங்கோலாவும் ஒன்றாக இருந்தது.

ஆனால் 1975 ஆம் ஆண்டு அங்கு உள்நாட்டு யுத்தம் ஆரம்பித்த நாளில் இருந்து அதன் பொருளாதாரம் மிகவும் மோசமான முறையில் சீரழிந்து விட்டது.

அங்கோலாவின் ஒரு கோடி சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் மனிதாபிமான உதவிகளில் தங்கியிருக்க வேண்டிய நிலையை இந்த 20 வருடகால உள்நாட்டு யுத்தம் ஏற்படுத்திவிட்டது.

யுத்தம் காரணமாக விவசாய உற்பத்திகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டுக் கடன் 1100 கோடி ஸ்ரேர்லிங் பவுண்ட்டாக அதிகரித்துள்ளது வரு

*சஞ்சாரன்*

டாந்த பணவீக்கம் 800 சதவீதம் அதிகரித்து வருகிறது.

அங்கோலாவின் வெளிநாட்டு வருமானத்தில் 97சதவீதம் எண்ணெய் ஏற்றுமதி மூலமே கிடைத்து வந்தது. கரையோரப் பகுதி எண்ணெய் வயல்கள் மூலம் தினமும் 5 லட்சத்து 50 ஆயிரம் பரல்கள் எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. மிகுதி வருமானம் கோப்பி, வைரக்கல் ஏற்றுமதி மூலம் கிடைத்தது.

ஆனால் யுனிட்டா இயக்கத்தின் கட்டுப் பாட்டுப் பகுதியில் அரசாங்கம் இந்த வருமானங்களை இழந்தது.

உருளைக்கிழங்கு முதல் ரேடியோ வரை தென் ஆபிரிக்காவிடமிருந்தும் ஐரோப்பிய நாடுகளிடமிருந்தும் வாங்க வேண்டிய நிலையை இந்த உள்நாட்டு யுத்தம் ஏற்படுத்தியது.

### யுனிட்டாவுக்கு வைரம் மூலம் பணம்

அங்கோலாவில் யுனிட்டா இயக்கத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வைரக்கல் பெருமளவு காணப்படுகிறது.

எல்லை நாடான ஸயர் ஊடாக வைரத்தை வெளிநாடுகளுக்குக் கடத்தி யுனிட்டா இயக்கம் வைரக்கற்களை நல்ல விலைக்கு விற்கிறது.

அங்கோலாவின் வைரக்கல் உற்பத்தியில் பத்தில் ஒரு

(5ஆம் பக்கம் பார்க்க)

**உதயன் ஞாயிறு சிறப்பம்சம்**


# கற்பகச் சோலை
## பனை நடுகைத் திட்டம்

5 வருடங்களில் 50 இலட்சம் பனை மரங்களை உருவாக்க
ஆண்டுதோறும் 15 இலட்சம் பனை விதை நடுகையை மேற்கொள்ளும்
இப்பணியில் நாம் அனைவரும் இணைந்து செயற்படுவோம்.

2000 ஆண்டளவில் 2கோடி பனை மரங்கள்

தொடர்புகளுக்கு:
பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதி,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

பனை அபிவிருத்திச் சபை
தேசிய வீடமைப்புச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

உங்களுக்கு, உங்கள் பிள்ளைகளுக்கு, ஏன் பேரப்பிள்ளைகளுக்கும்
தொடர்ச்சியாகப் பயன்தர வல்ல எங்கள் மண்ணின் கற்பகதரு.

(33697)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

யாழ். புதிய பல் நிலையத்திற்கு முன் ஸ்ரான்லி வீதி முகப்பாக ஒரு அறையும், அம்பலவாணர் வீதி முகப்பாக இரு அறையும் இணைந்த மலசலகூடத்துடன் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 55/3, அம்பலவாணர் வீதி, அத்தியடி. (33744)

இறைச்சிக் கோழி, நல்லின அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. இறைச்சிக் கோழி சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 698/15, சபாபதி வீதி, தலையாழி [வயிரவர் கோயிலுக் கண்மையில்], யாழ்ப்பாணம். (33745)

நல்லின பொமனேரியன் இரண்டு மாத ஆண் நாய்க் குட்டிகள் இரண்டு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 55, செட்டித்தெரு, நல்லூர். (33742)

நல்லினச் செவ்விளநீர் தென்னம் பிள்ளைகள் விற்பனைக்கு உண்டு. கனகசுந்தரம், டச்வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய் என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். (8009)

ஒரு சனல் ஆடும், ஓர் கடா குட்டியும் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு: இல 2, திருவள்ளுவர் ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (33718)

பிறிமா, இருஸ்சம்பு, புறொயிலர் குஞ்சுகளும், லோமன் பிறவுண் பேட்டுக் குஞ்சுகளும் 19-11-94 காலை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். அத்துடன் 2½ மாதம் நிரம்பிய வான்கோழிக் குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: ''இறைச்சிக்கோழி விற்பனை நிலையம்'', 15/7, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தி, நல்லூர். (33712)

### காணி விற்பனைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் பாதுகாப்பு வலையத்துள் போதனா வைத்திய சாலைக்குப் பின்னால் விக்ரோறியா வீதியில் சுபாஷ் ஹோட்டலுக்குப் பக்கத்தில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. 55, விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (33704)

### கோழி விற்பனை

6 மாதம் நிரம்பிய முட்டை இடுகின்ற White லைக்கோன், சில்கி, கோழிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: T. சண்முகராசா, கலட்டி ஒழுங்கை (மோகன் வீதி), கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (8008)

### மலிவு விற்பனை

3ஆம் தவணைப் பரீட்சைக்கு தயாராகும் மாணவர்களுக்காக ஆண்டு 3இல் இருந்து O/L வரை அனைத்து பாடங்களுக்குமான பயிற்சி வினாத்தாள்கள் (விடைகளுடன்) 50 வீதம் கழிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். Bond புத்தக நிறுவனம், 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (7988)

### தேவை

படம் பிறேம் செய்வதில் அனுபவம் உள்ளவர்களும், விற்பனை உதவியாளர்களும் தேவை. நேரில் தொடர்பு: யாழ். நுகர்வோர் காட்சியகம், இல. 441, கே. கே. எஸ். வீதி, சிவன் வடக்கு வீதிச் சந்தி, யாழ்ப்பாணம். (33741)

### றோணியோ, தட்டச்சு

மிகத் தெளிவான எழுத்துப் பிழைகளற்ற தத்ரூபமான படங்களுடன் (தமிழ், ஆங்கிலம்) Stencil கட்டண்ணி றோணியோ வேலைகளை குறித்த தவணையில் செய்து தர Bond புத்தக நிறுவனம், 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (7989)

### தவறிவிட்டது

நீலக்கல் பதித்த மோதிரம் ஒன்று இளங்கலைஞர் மன்றத்தில் 10-11-94இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கோயில் வீதியில் உள்ள கராட்டி கழகத்தில் மோகன் மாஸ்ரரிடம் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (33725)

### ஆண்டு - 4

ஆண்டு 4ற்கு புலமைப்பரிசில் (1995) மாதிரி வினாத் தாள்கள் (13-11-94) ஞாயிறு வெளியிடப்படும். புலமைப் பரிசில் பயிற்சி 24, தமிழ் கட்டுரைகள் 14, ஆங்கிலக் கட்டுரைகள் விடைகளுடன் வெளிவந்துள்ளன! புத்தக சாலைகளிலும் எம்மிடமும் பெற்றுக் கொள்ளலாம், புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (33743)

### வியாழ மாற்றம்

(11-11-94 வியாழமாற்றம் ரூபா 10/- சத்தியாவின் எல்லா ராசிகளின் பலன்கள்) எங்கும் விற்பனையாகின்றது. பாடசாலைப் புத்தகங்கள், இலங்கை இந்திய சஞ்சிகைகளுக்கும் யாழ். புத்தக சாலை, புதிய பஸ்நிலையம், யாழ்ப்பாணம். (33714)

## மற்றொரு சாதனை முயற்சி

அண்மையில் பாக்கு நீரிணை, ஆங்கிலக் கால்வாய் ஆகியவற்றை நீந்திக் கடந்து சாதனை புரிந்த — தமிழகத்தைச் சேர்ந்த — 12 வயதான — குற்றாலீஸ்வரன் எதிர்வரும் புதன்கிழமை ஆஸ்திரேலியாவிலுள்ள ''றோட்னஸ் கால்வாயை'' கடந்து சாதனை புரியவுள்ளார்.

அவரது இம்முயற்சிக்கு தமிழக முதல்வர் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி உதவியளித்துள்ளார்.

## சந்திரிகாவுக்கு வாழ்த்துச் செய்தி

ஸ்ரீலங்காவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சந்திரிகா குமாரதுங்காவுக்கு இந்திய ஜனாதிபதி சங்கர் தயாள்சர்மா, பிரதமர் நரசிம்மராவ், பங்களாதேஷ் ஜனாதிபதி பாருக் அஹமத்கான் லெஹாரி, பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ ஆகியோர் வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளனர். (உ-எ-ஐ-4)

## வாழ்த்துகிறோம்

பிரபல நில அளவையாளரும், நீர்வேலி ஐடியல் கல்விநிலைய நிர்வாகியுமான

உயர்திரு

**இராமையா செல்லத்துரை**

அவர்களுக்கு இன்று 60ஆவது அகவை பூர்த்தியடைகின்றது. இவரைச் சுகம் சிறப்பும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென மேற்படி கல்விநிலைய ஆசிரியர்களும், மாணவர்களும் வாழ்த்துகின்றார்கள்.

—ஐடியல் கல்வி நிலைய
ஆசிரியர்கள், மாணவர்கள்.

(33740)

## நான்காம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில்: 15 — 04 — 1925

விண்ணில்: 13 — 11 — 1990

**அமரர் A. S. பொன்ராஜா**

உழைப்பினால் உயர்ந்திட்ட உத்தமரே - அப்பா
ஊரார் வியக்க உயர்ந்தே வளர்த்தீரே
ஆண்டுகள் நான்கு உருண்டோடினாலும்
ஆறிடுமோ எம் நெஞ்ச துயரம்
நீண்டுவரும் எம் நினைவினிலே
நீங்கிடுமோ நின்னுருவம்
எங்கு நீர் சென்றாலும் – அப்பா
எம் நினைவெல்லாம் உம்முடனே
ஐந்தாம் ஆண்டும் உம் நினைவிலேயே...

இவரது ஆன்ம சாந்திக்காக நாளை (14-11-94) காலை 6-00 மணிக்கு அருள் ஆச்சிரமத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்;
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

397, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (33723)

## விண்ணக வாழ்வின் 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 17 — 05 — 1968

அமலன் அடியில்: 13 — 11 — 1988

செல்வன்

**டேவிற் அமலன் அன்ரன்**

''சீவியத்தில் நேசித்தவர்களே
மரணத்தில் மறவாதீர்கள்''

இவரின் ஆன்ம சாந்திக்காக நாளை 14-11-1994 காலை 6-00 மணிக்கு அருள் ஆச்சிரமத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்:
தந்தை, தாய், சகோதரி,

42/2, கோயில் வீதி,
யாழ்ப்பாணம். (33728)

யாழ். மாவட்ட
சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச்
சங்கங்களின் சமாசம்

## வருடாந்த பொதுச்சபைக் கூட்டம்
## 18-12-1994

மேற்படி கூட்டம் 1994-12-18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சமாசத் தலைவர் திரு. ச. முருகனேசன் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. கூட்ட அறிவித்தல் அங்கத்துவ சங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்தும் சமாசத்துடன் தொடர்பில்லாமலும் இருக்கும் அங்கத்துவ சங்கங்கள் கூட்ட அறிவித்தலையும், பொதுச்சபை பிரதிநிதிக்கான அதிகாரக் கடிதத்தையும் சமாச காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

க. நடேஸ்வரன்
பதில் மாவட்டச் செயலாளர்
யாழ் மா.சி.க.கூ.ச. சமாசம்.
யாழ்ப்பாணம்.

182 1/4, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (சி-9664)

உ
தேவி துணை
யா / திருநெல்வேலி
அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மன்
தேவஸ்தானம்

## புதிய சித்திரத்தேருக்கான அச்சு ஏற்றும் வைபவ விஞ்ஞாபனம்

எதிர்வரும் **14-11-1994** திங்கட்கிழமை காலை 9-30மணி தொடக்கம் 12மணி வரையுமுள்ள சுபமுகூர்த்த வேளையில் புதிய சித்திரத்தேருக்கான அச்சு ஏற்றும் வைபவம் மங்களகரமாக நடைபெறும். அடியார்கள் அனைவரும் முகூர்த்த வேளையின் போது வருகைதந்து மேற்படி விழாவினை சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,
தேவஸ்தானம்.

[33732]

## முக்கிய அறிவித்தல்

பண்டத்தரிப்புக்
கோட்ட தனியார் கல்வி நிறுவன
ஒன்றியத்தின்
ஆண்டிறுதிப் பொதுக் கூட்ட

## நேரமாற்றம்

எதிர்வரும் 14-11-1994 திங்கள் நடைபெற இருந்த பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் 16-11-1994 புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு சித்தன்கேணி சுப்றா கல்வி நிலையத்தில் நடைபெறும். இக்கூட்டத்தில் மாவீரர் நாள் எழுச்சி நிகழ்வு பற்றியும், ஏனைய நிர்வாக விடயங்கள் பற்றியும் கலந்துரையாடவுள்ளதால், எமது கோட்ட சகல தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகள், பிரத்தியேக வகுப்பாசிரியர்கள் அனைவரையும் தவறாது ஒன்று கூடுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முக்கிய குறிப்பு:

★ 14-11-1994 திங்கள் மாலைநேர வகுப்புக்களை நடத்தலாம். முன்னர் அறிவிக்கப்பட்ட விடுமுறை ரத்து செய்யப்பட்டுள்ளது.

★ இக்கூட்டத்தில் கலந்து கொள்ளாதவர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

செயலாளர்,
பண்டத்தரிப்புக் கோட்டம்.

[சி-9623]

## ஓராண்டு நினைவஞ்சலி



அகிலம்: 08 — 03 — 1917

இறைபதம்: 26 — 10 — 1993

**திருமதி காசிநாதர் இராசம்மா**

(சத்திரந்தை, களபூமி, காரைநகர்)

திதி:- 13-11-1994

ஒன்றுகள் இரண்டு ஓராண்டாகியும்
ஐயிரண்டு திங்கள் எமைச்சுமந்து ஈன்று பாரினில்
பலர் போற்ற வாழவைத்து - இன்று
விண்ணிலிருந்து ஆசிர்வதித்து நிற்கும் அன்னையை
நீங்கா நினைவுடன் நினைவு கூர்ந்து
ஆத்மாசாந்தியடையஇறையருள் வேண்டுகின்றோம்.

மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

23, ஐயனார் கோயில் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (33639)

## PERSONAL CLASS

இல. 14 சிறாம்பையடி லேன், யாழ்ப்பாணம்.

**AL கணக்கியல்**
**DAY CLASS**

ஆரம்பம்: திங்கள் **(14-11-1994)**
பி. ப. 12-30மணி

By: **A. S. A. கலைச்செல்வன்**

[33746]

## தமிழீழ நிர்வாகசேவை
### தமிழீழம்
## பதவி வெற்றிடங்கள்

தொழில்நுட்பவியலாளர் தரம் III இற்கான நேர்முகப் பரீட்சை தமிழீழ நிர்வாகசேவை செயலகத்தில் நடைபெறவுள்ளது. தகுதியானவர்கள் நேரில் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

காலம்: **14-11-1994** — திங்கள்
**9-00** மணியிலிருந்து **12-00** மணிவரை.
**15-11-1994** — செவ்வாய்
**9-00** மணியிலிருந்து **12-00** மணிவரை.

தகுதி: தேசிய தொழில் நுட்பவியல் தேர்வு (N. C. T.) (தொழில் நுட்பக்கல்லூரி) — குடிசார் பொறியியல் தேர்ச்சி பெற்ற அல்லது பரீட்சைக்குத் தோற்றியவர்கள்.

சான்றிதழ்களும், அத்தாட்சிகளும் பின்னர் சமர்ப்பிக்கப்படலாம்.

இடம்: தமிழீழ நிர்வாகசேவை,
தமிழீழம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

பொறுப்பாளர்,
தமிழீழ நிர்வாகசேவை.

(சி-9666)

## 1894 CENTENARY 1994

**J/Skandavarodaya College**
Kandarodai, Chunnakam.

Cordially invites you to the English Day 1994

Chief Guest:
**V. Lalith Raveendran Esqr,**
(Lecturer in English - University of Jaffna)

Venue: **College Main Hall**

Time: **Monday 14th, November 1994,**
**9.00 A.M.**

Principal, Staff and Students.

அன்பளிப்பு:

எம்மிடம் ஆலயத்திற்குத் தேவையான உயர்ரக வாகுமாலை, மகரதோரணம், ''சிம்சன்'' உற்பத்திகள், ஆடைவகைகள் யாவும் பெற்றுக் கொள்ளலாம்.

## நகர் தையல் பிடவை அகம்

பலாலி சாலை, திருநெல்வேலி.
(சி/5737)

## காணவில்லை

நந்தி!

நீ கேட்ட பொருள் கிடைத்துவிட்டது. உன் பிரிவால் அம்மா உடல் நலம் குன்றி உள்ளார். எங்கிருந்தாலும் உடன் வரவும்.

தகவல்:
**S. லோஜி**
(அக்கா)

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய். (33739)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 20 — 02 — 1937

மறைவு: 25 — 10 — 1993

**அமரர் தம்பிப்பிள்ளை கிட்டினர்**

(பாலகிருஷ்ணன்)

திதி: 13 — 11 — 1994

ஓராண்டுதான் ஓடி மறைந்தாலும், மல்லைநகர் வீற்றிருக்கும் எங்கள் குலதெய்வமென்று, மாகாளி அம்பிகையை வெள்ளி தோறும் நீர் சென்று வல்வினைகள் தீரவேண்டி பஜனைகள் புரிந்த நீர் இறைபதம் அடைந்து ஓராண்டுதான் ஓடி மறைந்தாலும், உங்களை நாம் மறப்போமா.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உமது பிரிவை என்றும் மறவாத:
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்.

காளிகோயிலடி,
மல்லாகம். (7806)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## கஷ்டமாகவே இருக்கும்

புதிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, தமது தேர்தல் வாக்குறுதியில் ஒன்றான —நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கும் திட்டத்தை— அடுத்த ஆண்டு ஜூலை 15 ஆம் திகதிக்கு முன் செயற்படுத்தப் போவதாகக் கூறியிருக்கிறார்.

இதற்கு வகை செய்யும் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக, தற்போதைய நாடாளுமன்றமே அரசமைப்பு நிர்ணய சபையாக மாறி செயற்படும் என அவரது அரசுத்தரப்பில் கூறப்பட்டிருக்கிறது.

1970இல் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்த ஸ்ரீ. ல. சு. க. தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசு இலங்கையை குடியரசாகப் பிரகடனம் செய்யும் அரசமைப்பைக் கொண்டு வந்தது.

அதன் பின் 1977 இல் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்த ஐ. தே. க அரசு நிறைவேற்று ஜனாதிபதி முறையை அறிமுகப்படுத்தும் அரசமைப்பைக் கொண்டுவந்தது.

இப்போது பொ. ஐ. மு. அரசும் புதிய அரசமைப்பை உருவாக்கப்போவதாக கூறுகிறது.

கடந்த 25 வருட காலத்தில் கட்சிகளின் கைகளில் ஆட்சிகள் மாறும் போது அரசமைப்பும் மாறும் நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் —

முன்னைய இரு தடவைகளிலும் அமோக பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்த அரசுகள் — சிங்கள, பௌத்த சார்புடைய — பெரும்பான்மை மக்களின் நலன்பேணுகின்ற—அரசமைப்பையே நடைமுறைக்குக் கொண்டு வந்தன. அதனால் அத்தகைய அரசமைப்புக்குச் செயலுரு கொடுப்பதில் அந்த அரசுகளுக்கு அவ்வளவு சிக்கல்கள் இருக்கவில்லை.

ஆனால் இப்போது நிலைமை வேறு. பொ. ஐ. மு. அரசுக்கு நாடாளுமன்றில் சாதாரண பெரும்பான்மைக்கே ஊசலாடும் நிலைமை.

போதாக்குறைக்கு விடுதலைப்புலிகளுடன் — தமிழர் பிரதிநிதிகளுடன் — பேச்சு நடத்தி, சமாதானத் தீர்வு காணப்போவதாகக் கூறிக்கொள்ளும் அரசுக்கு எதிராக எதிரணியில் இனவாதம் கக்கும் ஐ. தே. க. கட்சி கணிசமான அளவு ஆசனங்களுடன் — கிட்டத்தட்ட நாற்பது வீத உறுப்பினர்களுடன் — நாடாளுமன்றத்தில் அமர்ந்திருக்கும்நிலைமை.

புதிய அரசமைப்பை பொ. ஐ. மு. அரசு உருவாக்கினாலும் தற்போதைய அரசமைப்பை நீக்கும் அல்லது மாற்றீடு செய்யும் நடவடிக்கையை தற்போதைய அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு உட்பட்டே செய்ய வேண்டியிருக்கும்.

இந்த வகையில்—

தற்போதைய அரசமைப்பின் 82 ஆம் பிரிவின்படி, அரசமைப்பை மாற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் உள்ள உறுப்பினர்களின் [சமூகமளிக்காதோர் உட்பட] மூன்றில் இரண்டு பங்கினரின் ஆதரவு தேவை. இதுதவிர —

ஜனநாயக குடியரசு, ஒற்றை ஆட்சி, மக்களின் இறைமை, தேசியக்கொடி, தேசிய கீதம் பௌத்தமதம் அடிப்படை மனித உரிமைகள் ஆகியவை தொடர்பான ஏற்பாடுகளில் மாற்றங்களைச் கொண்டு வருவதற்கு சர்வசன வாக்கெடுப்பு மூலம் மக்களின் அனுமதி பெற வேண்டும் என்று 83 ஆம் பிரிவு வலியுறுத்துகிறது.

அத்துடன்—

புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்தி தீர்வு காண முயலும் அரசு, அத்தகைய தீர்வுத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு முன்னேற்பாடாக ஒற்றை ஆட்சி தொடர்பான ஏற்பாடுகள் உட்பட பல விடயங்களிலும் அரசமைப்பு மாற்றங்களைச் செய்யவேண்டியிருக்கும். எனவே —

நாடாளுமன்றில் மூன்றில் இரண்டுபங்குபெரும்பான்மை ஆதரவைப் பெறாமல்—

சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தாமல்—

புதிய அரசமைப்புக்கு செயலுருக் கொடுப்பது என்பது சந்திரிகா அரசுக்கு மிகவும் கஷ்டமான— சட்ட நெருக்கடிகளை தரக்கூடிய—விடயமாகவே இருக்கும்.

# இரண்டு சமாந்தரக் கோடுகளைத் தொட வைக்கும் பிரயத்தனமே சமாதானத்தை அடையும் முயற்சி

வருத்தி அழைத்தாலும் வாராது வாரா, பொருந்துவன போ என்றால் போகா— என்பது தமிழ் முதுமொழி.

சந்திரிகாவுக்குப் பொருந்திய மகோன்னத வெற்றியும் அவ்வாறே. இந்த நாட்டின் தேர்தல் வரலாற்றில், அரசியல் சரித்திரத்தில் சாதனை படைக்கவேண்டும் என்பது அவருக்குப் பொருந்திய ஒன்று. அதற்கேற்ற வகையில் அரசியல் சந்தர்ப்ப சூழ்நிலைகள் உருவாகின. அவர் பெரும் சரித்திரம் படைத்திருக்கிறார். எவரும் அவரின் வெற்றியைத் தடுத்திருக்க முடியாது என்பது நியதி, நியாயமாகும்.

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் இல்லாதவாறு

## அரச தரப்பில் புதிய அணுகுமுறை தேவை

திருமதி சந்திரிகா குமாரதுங்கா ஜனாதிபதி தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளில் 62.28சத விதத்தைப் பெற்றுக்கொண்டார். அதேபோல தமக்கு அடுத்த வேட்பாளரை விட சுமார் 20 லட்சம் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார். இவை இந்த நாட்டின் தேர்தல் வரலாற்றில் உருவாக்கப்பட்ட அபார சாதனைகளாகும்.

சந்திரிகாவின் இந்தப் பெரு வெற்றிக்கு, தமிழ் முஸ்லிம்

## பேச்சின் முதற்பகுதி நீண்டுவிடக் கூடாது

மக்களின் வாக்குகளே பெரிதும் துணை சேர்த்தன. வடக்கில் வாக்களிப்பு நடைபெற்ற இடங்களில் வாழும் தமிழ் மக்களும், கிழக்கு வாழ் தமிழ், முஸ்லிம் மக்களும், கொழும்பு உட்பட்ட தென்னிலங்கைப் பகுதித் தமிழ் மக்களும், மலையகத் தமிழ் மக்களும் அளித்த வாக்குகளே அவருக்கு எவரும் எதிர்பாராத வியத்தகு பெரும்பான்மையைப் பெற்றுக்கொடுத்தன.

### சிறுபான்மை மக்களின் பங்களிப்பு

எனவே சந்திரிகா நிலைநாட்டியுள்ள அரசியல்–தேர்தல்-சாதனைக்குப் பக்கபலமாக நின்றவர்கள் சிறுபான்மை இனமக்களேயாவர். அந்த வகையிலும் சந்திரிகாவின் வெற்றி ஏனைய-முந்திய-அரசுத் தலைவர்களின் வெற்றியைவிட வித்தியாசமானது என்ற சிறப்பையும் பெறுகிறது. அவர்கள் சிங்கள (பௌத்த) மக்களின் வாக்குகளைக் கொண்டே தமது பெரும்பான்மைகளையும் வெற்றிகளையும் அடைந்தனர். ஆனால் சந்திரிகாவின் பெரும்பான்மையும், வெற்றியும் நாட்டின் சகல இனமக்களினதும் வாக்குகளால் கிடைத்தவை.

சந்திரிகாவின் பெரு வெற்றிக்கு ஐக்கிய தேசியக் கட்சியிடம் ஆளுமை நிறைந்த தலைமைத்துவம் இல்லாது போனதும் ஒரு காரணமாகும். சந்திரிகாவைப் போன்ற நேர்மையும், துடிப்பும், திறமையும் மிக்க தலைவர் ஒருவர் அங்கே இருக்கவில்லை. விஜேதுங்கா, காமினி திஸாநாயக்கா, ரணில் விக்கிரமசிங்கா ஆகிய மூவருமே சந்திரிகாவுக்கு நிகராக, சமனாக நிற்க முடியாதவர்களாகவே சிங்கள மக்களால் நோக்கப்பட்டனர். இது ஐ. தே. கட்சியின் பெரும் பலவீனமாகியது.

காமினி குண்டு வெடிப்பில் இறக்காமல், தேர்தல் நடைபெற்றிருந்தால் கூட சந்திரிகாவே வென்றிருப்பார் என்பதனை தேர்தல் முடிவுகளின் போக்கு எடுத்து உணர்த்துகிறது.

### இனவாதத்துக்கு சாவுமணி

சந்திரிகாவின் வெற்றிக்கு உதவிய சிங்கள மக்கள், இந்த நாட்டில் கடந்த நாற்பத்தைந்து வருடங்களாக ஊட்டி வளர்க்கப்பட்ட இனவாதத்துக்குச் சாவுமணி அடித்திருக்கிறார்கள். ஐக்கிய தேசியக் கட்சி நடத்திய இனவாதப் பிரசாரத்தைச் சிறிதும் கணக்கில் எடுக்காமல் அதனை நிராகரித்துவிட்டார்கள். அதுமட்டுமன்றி, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே காணப்படவேண்டும். போர் நிறுத்தப்பட வேண்டும் என்று மிகத் தெட்டத் தெளிவாக ஆணை கொடுத்திருக்கிறார்கள்.

நாட்டின் எல்லா இன மக்களும் சேர்ந்து, சமாதானத்தையும், மனிதப் பெறுமானங்களையும், மனித விழுமியங்களையும் நிலைநாட்டுமாறு கொடுத்த ஆணைகளைக் கையில் ஏந்தியவாறு, மனதில் பதித்தவாறு திருமதி சந்திரிகா குமாரதுங்கா நேற்று முற்பகல் 11 மணிக்கு இலங்கையின் நான்காவது நிறைவேற்று ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். முன்னர் எப்போதும் இல்லாதவாறு, அவர் தமிழிலும் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டது அவதானிகளால் விசேடமாகக் குறிப்பிடப்பட்டது. அவர் இலங்கையின் முதலாவது பெண்

**உதயகாந்தன்**

ஜனாதிபதி என்ற பெருமையையும் பெறுகிறார்.

எல்லா மக்களும் சம உரிமை உடையவர்களாக இருக்கவேண்டும் என்பதனையும், சமாதானம் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதனையும், ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் நாட்டு மக்களுக்கு ஆற்றிய முதலாவது உரையில் சந்திரிகா வலியுறுத்திக் கூறினார். மக்களிடம் பெற்ற ஆணைக்கு இணங்க நாட்டில் சமாதானத்தை உருவாக்குவது அவருக்குள்ள முக்கிய பொறுப்பு. அவரது செயற்பாடுகளில் அதற்கே முதலுரிமை கொடுக்கப்பட வேண்டும்.

### உடனடியாக போர் நிறுத்தம் வேண்டும்

நாடு இன்றுள்ள நிலையில், சமாதானத்தை உருவாக்குவது என்பது இலகுவான காரியமல்ல. சமாதானத்தைக் காண்பதற்கு தமிழர் பிரச்சினை — இனப்பிரச்சினை — நீதியாகத் தீர்த்து வைக்கப்பட வேண்டும். அதற்கு அத்திவாரம் இடுவதற்கு உகந்த சூழ்நிலை தோற்றுவிக்கப்பட வேண்டும். அத்தகைய ஒரு சூழலுக்காக இப்போது நடக்கும் போர் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அரச பயங்கரவாதத்துக்கும் அடியோடு முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண்டும்.

இதனை நேரிடையாகச் சொல்வதானால், எவ்வித நிபந்தனையும் இன்றி உடனடியாகப் போர் நிறுத்தம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட வேண்டும். தமிழ்ப் பகுதிகளில் உள்ள (அரச பயங்கரவாதக் கருவிகளான) இராணுவ முகாம்களை அகற்ற வேண்டும். போர் நிறுத்தம் கொண்டு வரப்பட்டாலே தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் தொடங்கப்பட்ட பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்ல முடியும்.

சில பழைய சம்பவங்களைப் பிழையாகக் கற்பிதம் செய்து கொண்டு, போர் ஒருபுறமும், பேச்சுவார்த்தை மறுபுறமுமாக நடக்க வேண்டும் என்று கொழும்பில் உள்ள சில ஆலோசகர்களும், இராணுவ அதிகாரிகளும் இதுவரை கூறிவந்தனர். அந்த வரட்டு வாதங்கள், நிலைப்பாடுகள் யாவும் தூக்கி வீசப்பட வேண்டும்.

சமாதானத்தைக் காணுமாறு மக்களில் மிகப் பெரும்பாலானோர் அனுமதி அளித்த பின்னர், இத்தகைய ஆலோசனைகளை ஜனாதிபதி சந்திரிகா காதில் போட்டுக் கொள்ளக்கூடாது. இடைநிறுத்தப்பட்ட அரசு–புலிகள் பேச்சுவார்த்தை

## திடகாத்திரம் குறையுமுன் காரியம் ஆகவேண்டும்

சுமுகமாகத் தொடர்வதற்கு ஏதுவாக உடனடியாகப் போர் நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும்.

இன்னும் இரண்டொரு நாள்களில் அந்த அறிவிப்பு வெளியிடப்பட்டால், அரசு-புலிகள் இரண்டாம் கட்டப் பேச்சை மிக உற்சாகமாக மீண்டும் ஆரம்பிக்க ஏதுவாகும்.

### பேச்சை நீட்டக்கூடாது

அரசு – விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தை இரண்டு பகுதிகளாக நடைபெறும் என்பதே முந்திய ஏற்பாடு. அதாவது, முதலில் வடபகுதித் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை ஆராய்ந்து அவற்றைச் செயற்படுத்துவது. அதற்கடுத்து தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை — அரசியல் பிரச்சினைகளை — பேசி தீர்வுக்குரிய திட்டம் ஒன்றை வகுப்பது என்பதாகும்.

எனவே, தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்கும் முதலாவது பகுதிப் பேச்சுக்களை நீட்டிக் கொண்டு போகக்கூடாது. பொருளாதாரத் தடையை முற்றாக நீக்கியும், போக்குவரத்து தடையை நீக்கியும் தமிழ் மக்களுக்குரிய புனர்வாழ்வு புனர்நிர்மாணப் பணிகளை முடுக்கிவிட வேண்டும். தமிழ் மக்கள் இயல்பு வாழ்க்கையை நடத்துவதற்குத் தேவையான சூழ்நிலையை உருவாக்குவதற்குத் தாமதம் இன்றிச் செயற்பட வேண்டும். அதில் காலத்தை நீர்த்த எண்ணக் கூடாது.

இரண்டாவது பகுதியான அடிப்படை அரசியல் பிரச்சினைகளை ஆராயும் போது பல சிக்கல்களும், தடங்கல்களும் உண்டாகும் சாத்தியம் உண்டு. அது எதிர்பார்க்கப்பட வேண்டியதுமாகும்.

தமிழர், முஸ்லிம்களுக்கு அதிகாரப் பரவல் மூலம் கூடிய அரசியல் அதிகாரத்தை வழங்குவது என்பதே புதிய அரசு இதுவரை வெளிப்படையாகத் தெரிவித்துள்ள யோசனையாகும். வடக்கு–கிழக்கு மாகாணத்தின் எல்லைகளை மாற்றுவதன் மூலம் புதிய அதிகார அலகு ஒன்றைத் தமிழர்களுக்கு வழங்கலாம் என்பதும் சந்திரிகா அரசின் நிலைப்பாடாகும். இவற்றைத் தவிர தமிழர் பிரச்சினைக்கான திட்டவட்டமான தீர்வு எது என்பது அரசின் வாயால் இன்னும் வரவில்லை.

### இரண்டு சமாந்தரக் கோடுகள்

தமிழர்களைப் பொறுத்தவரையில் தன்னாட்சி அதிகாரம் உள்ள ஓர் அமைப்பைத் தவிர்ந்த, அதற்குக் குறைந்த, எதனையும் ஏற்றுக்கொள்ள முடியாத நிலை உண்டு. தமது சுதந்திரத்தையும், இறைமையையும் பேணும் விதத்திலான தன்னாட்சி அமைப்பே அவர்களின் அரசியல் அபிலாசை. கடந்த 45 வருட கால கசப்பான அனுபவங்களின் பின்னரும், இரண்டு மூன்று சந்ததி கடந்தாலும் மீள்வித்து முந்திய நிலைக்கு எட்ட முடியாத ஆள், உடைமை இழப்புகளின் பின்னரும், வெறும் அதிகாரப் பரவல் அலகை தமிழர்கள் எப்படி ஏற்றுக் கொள்வது? அது எந்த வகையில் நியாயமானது?

எனவே தமிழர்கள் பெற நினைப்பது ஒரு நேர் கோடாகவும் அரசாங்கம் தமிழர்களுக்குக் கொடுக்க நினைப்பது இன்னொரு தனி நேர்கோடாகவும் உள்ளதை அவதானிக்கலாம். இந்த இரண்டு கோடுகளும் சமாந்தரமாகவே அமைந்துள்ளன. சமாந்தரக் கோடுகள் ஒன்றை மற்றது தொடுவது என்பது நடவாத காரியம்!

அவை தொட்டால் தான் பேச்சு வார்த்தையில் இணக்க நிலை உண்டாகும். இரண்டு சமாந்தரக் கோடுகளை சந்திக்க வைக்க வேண்டுமானால், ஒரு கோட்டை ஏதோ ஒரு பக்கத்தால் சரித்து சாய் கோடாக்க வேண்டும். தமிழர்களின் நிலைப்பாட்டை சாய் வாக்குமாறு கேட்பது நியாயமற்றது. அரசாங்கத்தின் நிலைப்பாட்டிலேயே விட்டுக் கொடுப்புகள் செய்து அதன் கோட்டைச் சாய் வாக்க வேண்டும்.

### புதிய அணுகுமுறை தேவை

பல இன, பல மொழி, பல சமயமக்கள் வாழும் நாடுகளில் ஒற்றையாட்சி அரசு முறை சமாதானத்தையும், சௌஜன்யத்தையும் நிலைநாட்டத் தவறிவிட்டதைக் கவனத்தில் எடுத்துக் கொள்வது நல்லது. சமஷ்டி ஆட்சி முறையும், கூட்டாட்சிமுறையுமே எல்லா இன, மத, சமூக மக்களுக்கும் சம அந்தஸ்தையும், சம உரிமைகளையும் வழங்கி அமைதிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்றன.

இந்த அரசியல் யதார்த்தத்தை, முந்திய ஐ. தே. கட்சி அரசு பார்க்க மறுத்தது உள்ளதைக் காண விரும்பாது தலையை மண்ணுக்குள் புதைக்கும் தீக்கோழியாக நடந்து கொண்டது.

புதிய ஜனாதிபதி சந்திரிகாவும், அவரது புதிய அரசினரும் ஐ. தே. கவை விட வித்தியாசமான, புதுமைப் போக்குடையவர்களாகக் காணப்படுகின்றனர். எனவே தாங்கள் நியாயமானவர்கள், என்பதைக் காட்டிக் கொள்ளும் வகையிலாவது புதிய வழியில் சிந்திக்க வேண்டும். புதிய அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

சமஷ்டி என்ற சொல்லை அசுத்தமான வார்த்தையாகச் சிங்கள மக்கள் கருதுகிறார்கள்; அதனை உச்சரித்தாலே அரசியல் ஆபத்து ஏற்பட்டுவிடும்; என்று ஐ. தே. கட்சி கைக்கொண்ட நிலைப்பாட்டை புதிய அரசு மறந்து போயும் நினைக்கக் கூடாது.

பொதுத் தேர்தலிலும், ஜனாதிபதித் தேர்தலிலும் சமாதானத்தைக் காண வேண்டும் என்று மக்கள் அளித்த தீர்ப்பு பக்கபலமாக இருக்கும் போது நிரந்தரமான சமாதானத்தைக் கொண்டு வருவதற்கான சரியான வழியில் நடக்கவேண்டும். அதற்குத் தயக்கம் இருக்கக்கூடாது.

### ஒற்றையாட்சியில் தீர்வு கிடையாது

தமிழர்களுக்கென ஒரு தனியரசு சிங்களவர்களுக்கென ஓர் அரசு, இரண்டு அரசுகளுக்கும் பொதுவான கூட்டரசு என்ற ஆட்சி முறை குறித்து புதிய அரசாங்கம் ஏன் சிந்திக்கக்கூடாது? அத்தகைய ஒரு விட்டுக் கொடுப்பைச் செய்து தமது நேர் கோட்டை சாய் கோடாக்குவதற்கு போதிய அதிகாரமும், மக்கள் ஆதரவு என்ற பலமும் சந்திரிகாவுக்குக் கிடைத்துள்ளன.

எப்படியோ, எதுவானாலும்—

ஒற்றையாட்சி அரசு முறையை மாற்றாமல், இனப்பிரச்சினையைத் தீர்ப்பது என்பது வீண் கனவாகவே கலையும். அரசமைப்பை அடுத்த எட்டு மாதங்களுக்குள் மாற்றப் போவதாகத் திடசங்கற்பம் பூண்டிருக்கும் அரசு, அதனோடு சேர்த்து ஆட்சி முறையையும் மாற்றுவதற்கு வழி செய்ய வேண்டும். அப்போது தான் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான ஊற்றுக்கண்ணைத் திறக்க முடியும்.

இதனை இப்போது செய்யாவிடில் நாள் ஆக ஆக, அரசுக்கு வேறு பல பிரச்சினைகள் தலையிடி கொடுத்து அதன் திடகாத்திரம் (Stamina) குன்றத் தொடங்கலாம். அத்தகைய ஒரு நிலை உண்டாகிவிட்டால், சந்திரிகா கூறுவது போல, எல்லா இன மக்களும் சம அந்தஸ்துடனும், சம உரிமைகளுடனும் வாழக்கூடிய புதிய நாட்டை உருவாக்க முடியாமற் போய்விடும்.

எனவே, இது விடயத்தில் உடனடிக் கவனமும், அக்கறையும், செயற்பாடும் தேவை. ★

**சூரியகாந்தி**
**உதயன் ஞாயிறு சிறப்பிதழ்**

## புலிகளின் குரல் வானொலியில்

**13 — 11 — 1994**
**ஞாயிறு இரவு**

- ★ 08-01 — இசையரங்கம் — நிகழ்ச்சியில் ரவி.ராஜி சகோதரர்களின் நாதஸ்வர இசைக்கச்சேரி
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — தொடர் நாடகம் — பொன். கணேசமூர்த்தி எழுதும் "இலங்கை மண்" 47ஆம் அங்கம்
- ★ 9-00 — இரவு நிகழ்ச்சிகள் நிறைவு

**14— 11 — 1994**
**திங்கள் காலை**

- ★ 7-03 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
- ★ 8-00 — காலை நிகழ்ச்சிகள் நிறைவு

**அங்கோலா.....**

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பங்குமட்டுமே அரசாங்கத்தின் கைக்கு கிடைப்பதாக மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

### யுனிட்டாவை நம்பமுடியாது

ஏற்கனவே ஒப்புக்கொண்டபடி யுனிட்டா இயக்கத் தலைவர் ஜோனஸ் சாவிம் எதிர்வரும் 15 ஆம் திகதி சமாதானஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவாரா என்பது இன்னும் கேள்விக்குறியாகவே இருக்கிறது. ★

# சிறந்த அரசியல், கல்வி பின்னணியில் வளர்ந்து உயர்ந்து நிற்கும் சந்திரிகா

புதிய ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவின் பின்னணியில் பல புதுமையான அம்சங்கள் உள்ளன.

திருமதி சந்திரிகாவே முதன் முதலாக இலங்கை நாடாளுமன்றத்தில் பிரெஞ்சுப் பல்கலைக்கழகம் ஒன்றில் படித்துப் பட்டம் பெற்ற ஒரு தலைவர் ஆவார். தென் கிழக்காசியாவில் என்று கூடச்சொல்லலாம்.

இது காலவரையும் இலங்கை நாடாளுமன்ற அரசியலில் இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகங்களில் படித்துப் பட்டம் பெற்றவர்களே முனைப்பாக முன்னணியில் செயற்பட்டு வந்துள்ளார்கள். இவர்கள் பொதுவாக பிரிட்டிஷ் பாரம்பரியம் பழைமைவாதக் கொள்கைகளில் ஊறித் திளைத்தவர்கள்.

மாறாக, சமத்துவம், சகோதரத்துவம், ஜனநாயகம் ஆகிய கொள்கைகளை உலகில் பிரபல்யப்படுத்திய பிரெஞ்சுப் புரட்சியினதும் (1789) பின்னர் பல தீவிரவாதக் கருத்துகளினதும் ஊற்று மூலமாக இருந்த பாரிசின் பதிவு சந்திரிகாவில் இருக்கத்தான் செய்யும்.

இந்த நூற்றாண்டின் 60 ஆம் ஆண்டுகளின் பிற்பாதியில் ஏற்பட்ட தீவிரமான பிரெஞ்சு மாணவர் இயக்கங்களிலும் திருமதி சந்திரிகா நேரடியாகக் கலந்து கொண்ட ஒருவர் என்பதும் கவனத்துக்கு உரியது.

மேலும், பிரெஞ்சுக்காரரின் நாசூக்கான நவநாகரிகத்தன்மையும் திருமதி சந்திரிகாவை உருவாக்குவதில் பெரும் பங்களித்திருக்கும், உதவியிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

திருமதி சந்திரிகா பாரிசில் படித்தபோது அப்பொழுது பிரெஞ்சுத் தூதரகத்தில் தூதராகப் பணி புரிந்த திரு. என். பாலசுப்பிரமணியம் அவருடைய பாதுகாவலராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர் இதே காரணத்துக்காக, அதாவது திருமதி பண்டாரநாயக்காவின் மகளுக்குப் பாதுகாவலராக இருந்ததற்காக திரு. பாலசுப்பிரமணியம் பல்வேறு பதவி [illegible] களையும் பதவி இறக்கங்களையும் சந்தி[illegible] அது இன்னொரு கதை.

இதில் நாம் கவனிக்க வேண்டியது, இன்றைய சந்திரிகா குமாரதுங்காவை உருவாக்க இவையெல்லாம் துணைபுரிந்திருக்கும் என்பதே ஆகும்.

[சந்திரிகா—விஜயகுமாரதுங்கா இவர்கள் இருவரைப் [illegible] யிலும் எவர் எவர்மீது செல்வாக்கு வகித்தார் என்ற கேள்வியும் எழுகின்றது.

விஜயகுமாரதுங்காவின் அரசியல் வளர்ச்சியானது

**—பாரதிநேசன்—**

சந்திரிகா அளித்த கொள்கை-கோட்பாட்டு ஊட்டலின் அடிப்படையிலேயே ஏற்பட்டது என்ற கருத்து ஒன்று நிலவுகின்றது.

அதேவேளை விஜயகுமாரதுங்காவின் சாதாரண குடும்ப மூலம் மக்கள் கவர்ச்சித் தன்மை ஆகியனவும் சந்திரிகாவில் செல்வாக்கு வகித்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

இருபது லட்சம் பெரும்பான்மை வாக்குகளால் [illegible] என்ற வரலாற்றுச் [illegible] 62.28 சதவீத வாக்குகளையும் பெற்று பெருவெற்றி பெற்றிருக்கிறார் சந்திரிகா.

தமது கணவர் விஜயகுமாரதுங்காவின் மூலம் கிடைத்த மக்கள் கவர்ச்சியும் அவரது இந்தச் சாதனைகளுக்கு அத்திவாரமாக அமைந்திருக்கிறது எனலாம்.

தேர்தலில் ஈட்டிய இந்தச் சாதனைகளுடன் ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் ஸ்ரீலங்காவின் முதல் பெண் ஜனாதிபதி என்ற சாதனையையும் சேர்த்துக் கொண்டார் சந்திரிகா.

அவர் ஆசியாவின் இரண்டாவது பெண் ஜனாதிபதி.

உலகின் நான்காவது பெண் ஜனாதிபதி என்ற பெருமையும் அவருக்கு உண்டு.

இவை மட்டுமா? அவரது தந்தை இந்த நாட்டின் பிரதமராக இருந்தவர், தாயும் பிரதமராக இருந்தவர். அவரும் மூன்று மாதங்கள் பிரதமராகப் பணிபுரிந்து இப்போது ஜனாதிபதியாக உயர்ந்திருக்கிறார்.

மிகச்சிறந்த அரசியல், சமூகத் தொடர்பு, கல்விப் பின்னணிகளைக் கொண்ட தனித்துவமான தலைவராக அவர் திகழ்கிறார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடலில் தத்தளித்த 4 இந்திய மீனவர்கள்

கொழும்பு, நவ. 13

இந்திய மீனவர்கள் நால்வரை கடலில் இருந்து மீட்டிருப்பதாக இலங்கை கடற்படை கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்திற்கு தெரிவித்துள்ளது.

இவர்களது படகு கவிழ்ந்ததைத் தொடர்ந்து இவர்கள் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தனர் என்று இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது.

படகைப் பழுது பார்த்து மீனவர்களை மீண்டும் இந்தியாவுக்கு அனுப்பி வைப்பதற்காக இந்தியத் தூதரகம் இலங்கை அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டிருக்கிறது.

தற்போது இம்மீனவர்கள் தலை மன்னாரில் இலங்கைக் கடற்படையின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.


யாழ்.
றோட்டறிக் கழகத்தின்
ஆதரவில்

## இலவச
## பூச்சி மருந்து விநியோகம்
## (WORM TREATMENT)

யாழ். றோட்டறிக் கழகத்தின் ஆதரவில் 18,000 பேருக்கு பூச்சி மருந்து வழங்கும் திட்டத்தின் இறுதி கட்டமாக இன்று காலை 9 மணிக்கு சுழிபுரம், தொல்புரம் பகுதி வாழ் மக்களுக்கு யாழ். றோட்டறி கழகம் தொல்புரம் றோட்டறி கிராமிய குழுவினரது அனுசரணையுடன் வழங்கவுள்ளது. இந்த நிகழ்வில் அப்பகுதி மக்கள் குடும்ப அங்கத்தவர்கள் அனைவரையும் இந்த பூச்சி மருந்துகளை பெற்று பயன் பெற அழைக்கின்றோம்.

Dr. க. விவேகானந்தன்
சமூக சேவை இயக்குநர்
யாழ். றோட்டறி கழகம்.
(சி-9668)


## மரண அறிவித்தல்கள்

### செல்வி சியாமினி இராசையா

தெல்லிப்பழை விராங்கொடையைப் பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கு மதவடி மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சியாமினி 9 – 11 – 94 இல் கொழும்பில் காலமானார். அன்னார் காலம்சென்ற இராசையா, நேசம்மா தம்பதிகளின் அன்பு மகளாவார்.

ஈமக்கிரியைகள் 10 – 11 – 94 இல் கொழும்பில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. இராஜ்குமார் (அண்ணன்)
சுதுமலை தெற்கு மதவடி,
மானிப்பாய். (33751)

### செல்வன்
### சுகன்யன் சண்முகநாதன்

சண்டிலிப்பாய் நாகபூஷணி அரிசி ஆலை உரிமையாளர் சண்முகநாதன் (தம்பி) சசிகலா தம்பதிகளின் அன்புப் புதல்வன் சுகன்யன் கொழும்பில் நேற்றுக் காலமானார்.

இவர் லாவன்யாவின் அன்புச் சகோதரரும், காலம் சென்ற கெங்காதரம் – லட்சுமிப்பிள்ளை (அமெரிக்கா), கோண்டாவில் நெட்டிலிப்பாய் சுந்தரலிங்கம் கமலாதேவியின் பேரனும், டாக்டர் ஞானசேகரம் – (கருணா) (அமெரிக்கா), சந்திரசேகரம் (புறூத்), ஸ்ரீ உருத்திராதேவி, நாதன் – சசிமேனகா (சுவிஸ்) ஆகியோரின் பெறாமகனும், சிவசுந்தரம் – உமாதேவி (கனடா), சுரேந்திரன் – உருத்திராதேவி (அமெரிக்கா) கணேசநாதன்–மதிவதனி (லண்டன்)' சசிகரன் (சுவிஸ்) சசிசுதன், சசிதீபன் ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.94) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கொழும்பு களுபோவிலை ஜயரெத்தின மலர்ச்சாலையில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. சுதன்
[மாமன்]
நாகபூஷணி மில்,
சண்டிலிப்பாய். [33757]

### சிவசுப்ரமணியம் சிவபாக்கியம்

வேலணை 5 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், 27/11, ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. சிவசுப்ரமணியம் சிவபாக்கியம் 12- 11- 94 அன்று அதிகாலை காலமாகிவிட்டார்.

இவர் நாகலிங்கம் – சிவகாமிப்பிள்ளையின் அன்பு மகளும், சின்னத்தம்பி – தங்கமுத்துவின் மருமகளும், காலஞ்சென்ற சிவசுப்ரமணியத்தின் அன்பு மனைவியும், கந்தசாமி (கந்தஞானி – யாழ். போதனாவைத்தியசாலை), தவராஜா (கனடா), சிவப்பிரகாசம் (கணக்காளர் சவூதி அரேபியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், பத்மாவதி, தனலக்ஷ்மி, கங்கேஸ்வரி, மகாதேவி, பரமேஸ்வரி, ஆகியோரின் அன்பு மாமியாரும், இராசலிங்கம், கனகம்மா ஆகியோரின் சிறிய தாயாரும், விஜித்தா (யாழ். மருத்துவ பீடம்), சிவதனுஜா, செந்தூரன், இளந்திரையன், யசோதரா, சிவாஜினி, லோகப்பிரகாஷன் 'ஆகியோரின் அன்புப் பாட்டியும் 'ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு துண்டி மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்;
சு. கந்தசாமி
(யாழ். போதனா வைத்தியசாலை)
(33756)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி,292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 13—11—1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

### இரு தரப்பும்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

போயிற்று; அச்சம் நிறைந்த நடவடிக்கைகள் நாட்டில் தலைதூக்கின. எந்தவித தடையும் இன்றி அழிவுப் பாதையில் அவை தொடர்ந்து முன்னேறிச் சென்றன.

குறுகியதும் சுயநலம் கொண்டதுமான இலக்கை அடைவதற்கான ஒரே வழியாக அரசியல் அதிகாரத்தை உணர்ச்சியற்ற ஆட்சியினர் கொண்டிருந்தனர்.

ஒழுக்கநெறி, சமத்துவம், நீதி ஆகிய சகல அம்சங்களையும் அந்த ஆட்சி மீறியது; நடைமுறைப் பண்புகளும், பெறுமானங்களும் இல்லாத ஒரு சூழ்நிலையில் பாதுகாப்பைத் தேடிய ஒரு சமுதாயத்தை அந்த ஆட்சி விட்டுச்சென்றது.

#### மக்களின் வாக்கு

சமாதானத்துக்கும் மனித நேயப் பெறுமானங்களுக்கும் என மக்கள் இப்போது வாக்களித்தனர்.

துப்பாக்கி வேட்டுக்களின் சக்தியை விட வாக்குச் சீட்டுகளின் பலத்தால் ஆட்சியைத் தோற்கடிக்க முடியும் என்று உலக நாடுகளுக்கு அவர்கள் திட்டவட்டமாக நிரூபித்துள்ளார்கள்.

வன்செயல்களைக் கைவிட்டு சுதந்திரம், ஜனநாயகப் பண்புகள், சகலருக்கும் சுபிட்சம் என்ற கொடியை ஏந்திச் செல்லவென இந்த நாட்டு இளைஞர்கள் அனைவரும் இணங்கியுள்ளனர்.

நாட்டு மக்கள் சமாதானத்தில் எவ்வளவு தூரம் அக்கறை காட்டியிருக்கிறார்கள் என்பதை அவர்கள் அளித்த வாக்குகள் எவ்வித சந்தேகமும் இன்றி நிரூபித்திருக்கின்றன.

#### சமாதானத் தீர்வு

பிரச்சினையில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினருக்கும் மரியாதை கிடைக்கும் விதத்தில் சமாதானம் ஏற்படுவது அவசியம் ஆகும்.

எனது அரசாங்கம் சமாதானத்தை நிலைநாட்டத் தொடர்ந்தும் பாடுபடும்.

சமாதானத்தை அடைவதற்கான மார்க்கம் கஷ்டமானதும் கடினமானதும் ஆகும்.

சிங்கள மக்களின் உரிமைகளைப் பாதுகாத்துப் பலப்படுத்தும் அதே சமயத்தில் சகல சமூகத்தினரதும் பெருந்தன்மை, சுயமரியாதை, சம அந்தஸ்து என்பன அங்கீகரிக்கப்படும் விதத்தில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான வழி அமைந்திருக்கும் என்பதை நாம் நிச்சயித்துக் கொள்வோம்.

இது பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு ஓர் அத்தியாவசிய அடிப்படையாக அமையும்.

அரசியல் வன்செயல்கள் ஒழிக்கப்படுவதற்கும் அச்சமான சூழ்நிலை நீக்கப்படுவதற்கும் கௌரவம், மரியாதை என்பன மீண்டும் ஏற்படுத்தப் படுவதற்கும் எமது அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளை நாட்டு மக்கள் திட்டவட்டமான விதத்தில் அங்கீகரித்துள்ளார்கள்.

#### ஜனாதிபதி முறை ஒழிக்கப்படும்

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையின் தீய விளைவுகளை மக்கள் உணர்ந்துள்ளனர். அதே சமயத்தில் ஜனநாயக வழிமுறையிலான வாழ்க்கையின் சிறப்பையும் அவர்கள் அறிந்துள்ளார்கள்.

எனவே இந்த நாட்டின் அரசமைப்பிலிருந்து இந்த இருண்ட பகுதி நீக்கப்பட வேண்டும் என்பது முக்கியமானதாகும்.

வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பினாலும் வேலை வாய்ப்புக் குறைவினாலும் பொருளாதாரக் கஷ்டங்களை எதிர்நோக்கும் மக்களுக்கு உடனடி நிவாரணம் அளிப்பது மிக அவசியம் ஆகும்.

#### பொருளாதாரம்

நாட்டின் பொருளாதாரம் சுதந்திரமானதாகவும் போட்டி அடிப்படையில் அமைந்ததாகவும் இருக்கும் என்பதைப் புதியஅரசாங்கம் நிச்சயித்துக்கொள்ளும்.

அரசாங்க நடவடிக்கைளில் உண்மை நிலை நிறைந்திருக்கும். வெளிநாட்டு முதலீடுகளுக்கு ஆர்வம் அளிக்கப்பட்டு அவை பாதுகாக்கப்படும்.

இத்தகைய அபிவிருத்தியின் பலாபலன்களை மக்கள் பெற்றுக் கொள்வார்களா என்பதையும் அரசாங்கம் நிச்சயித்துக் கொள்ளவுள்ளது.

வருமான அதிகரிப்பினாலும், அதிகரித்த வேலை வசதியினாலும் இவற்றை நிறைவேற்ற முடியும். இந்தக் குறிக்கோள்களை அடைவதற்கு என நானும் எனது தலைமையிலான அரசாங்கமும் அர்ப்பணி[illegible]ளும். — என்றார் (அ-உ)

# முதன்நிலை, இளநிலை பரீட்சார்த்திகளுக்கு

யாழ்ப்பாணம், நவ. 13

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் நடத்தும் முதன்நிலை, இளநிலைத் தேர்வுகள் முறையே நாளையும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும் ஆரம்பமாகவுள்ளன.

முதன்நிலைத் தேர்வில் நாளை திங்கள் முற்பகல் 8.30 மணிமுதல் தமிழ்மொழி ஆங்கிலம், சமயம் ஆகிய பாடங்களுக்கும் —

நாளை மறுதினம் காலை 8.30 மணி முதல் கணிதம், சுற்றாடல் ஆகிய பாடங்களுக்கும் பரீட்சை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினாத்தாள்களிலேயே விடையளிக்கவேண்டும்.

இளநிலைத் தேர்வு முன்னர் அறிவிக்கப்பட்ட நேர அட்டவணைப்படியே நடைபெறும். பரீட்சார்த்திகள் எல்லாப் பாடங்களுக்குமுரிய இரண்டாம் பகுதி வினாத்தாள்களுக்கு எழுது தாள்களிலேயே விடையளிக்க வேண்டும். சித்திரப் பாடத்துக்கு சித்திர எழுதுதாள் பயன்படுத்தப்பட வேண்டும். எழுதுதாள்கள் அனைத்தையும் பரீட்சார்த்திகளே தம்முடன் எடுத்துவரவேண்டும் என்று தேர்வு ஆணையாளர் தெரிவித்துள்ளார் (ஐ)

### கொரிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட தீயை அணைக்க முடியாமற் போனதாகவும்— கப்பலின் பல பகுதிகள் தீயினால் வெடித்துச் சிதறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தீப் பிடித்த நிலையில் அந்தக் கப்பல் கடலில் 48கிலோ மீற்றர் தூரத்துக்கு அடித்துச் செல்லப்பட்டுள்ளது.

ஜப்பானில் இருந்து குவைத்துக்குச் சென்றுகொண்டிருந்த சமயமே அந்தக் கப்பலில் தீ பற்றியது. தீவிபத்துக்கான காரணம் எதுவும் உடனடியாகத் தெரியவரவில்லை. (ஐ-6)

### மும் மொழி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துடன் கண்ணுற்றார்.

ஜனாதிபதி செயலாளர் கே. எச். ஜே. விஜேதாச முதலில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் ஜனாதிபதி பதவியேற்றது பற்றிய பிரகடனத்தை வாசித்தார்.

தொடர்ந்து புதிய ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்க உறுதிமொழியை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வாசித்து அதனைப் பிரதம நீதியரசர் ஜி. பி. எஸ். டி. சில்வாவிடம் ஒப்படைத்தார்.

அவர் தமிழில் பின்வருமாறு கூறினார்.

''சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க ஆகிய நான் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் ஜனாதிபதி என்ற பதவிக்கான கடமைகளையும் பணிகளையும் இலங்கை ஜனநாயகக் குடியரசின் அரசியலமைப்புக்கும் சட்டத்துக்கும் இணங்க பற்றுறுதியோடு புரிவேன் என்றும், இலங்கைக் குடியரசுக்கு விசுவாசம் உள்ளவராக இருப்பேன் என்றும் எனது திறமைக்கு இயன்றவரை இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பை உறுதியாகப் போற்றிக் காப்பேன் என்றும் பயபக்தியுடன் வெளிப்படுத்தி உறுதி செய்கின்றேன்'' — என்று குறிப்பிட்டு, ஒப்பமிட்டு பிரதம நீதியரசரிடம் கையளித்தார்.

அப்பத்திரத்தில் பிரதம நீதியரசர் ஒப்பமிட்டு உறுதிப்படுத்திய பின்னர் அதனை மீண்டும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் ஒப்படைத்தார்.

அதனைத் தொடர்ந்து அரசமைப்பின் ஏழாவது அட்டவணைக்கு கீழ்வரும்— பிரிவினைக்கு எதிரான— உறுதிமொழியையும் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் வாசித்து சந்திரிகா உறுதியுரை செய்து கொண்டார். அந்த உறுதியுரையில் அவர் கூறியதாவது:-

சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க ஆகிய நான் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் ஜனாதிபதி என்ற முறையில் அரசியலமைப்பை உறுதியாகப் போற்றிக் காப்பேன் என்றும் இலங்கையின் ஆள்பல எல்லைக்குள் தனிநாடு ஒன்றை உருவாக்குவதற்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ ஆதரவோ பிரசாரமோ, ஊக்கமோ, நிதி உதவியோ, ஒத்துழைப்போ நல்கமாட்டேன் என்றும் பயபக்தியுடன் வெளிப்படுத்தி உறுதி செய்கிறேன்'' — என்றார்.

அதன் பின்னர் சிங்களத்திலும் சுருக்கமாகத் தமிழிலும் ஆங்கிலத்திலும் நாட்டு மக்களுக்குப் புதிய ஜனாதிபதி உரை நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து பழைய நாடாளுமன்றக் கட்டடமுன்றிலில்முப்படைகளின் அணி வகுப்பு மரியாதையை புதிய ஜனாதிபதி ஏற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வு மழைக்கு மத்தியில் இடம் பெற்றது.

புதிய ஜனாதிபதிக்கு 21 பீரங்கிக் குண்டுகள் தீர்த்து [illegible] பதவியேற்பு வைபவம் முடிந்தது.

# விவசாய பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், நவ. 13

விவசாய அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்குடன் விவசாய போதனாசிரியர் பிரிவு ரீதியாக விவசாய பயிற்சி வகுப்புக்களை நடத்த தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், விவசாய திணைக்களமும் இணைந்து நடவடிக்கை மேற்கொண்டுள்ளன.

அந்த வகையில் எதிர்வரும் 15 ஆம் திகதி கீரிமலை பிரிவில் காலை 10.00 மணிக்கு பெருமாள்கடவை பிள்ளையார் கோவிலடியிலும் —

பளை பிரிவில் காலை 10.00 மணிக்கு தர்மர்கேணி கிராமிய முன்னேற்றச் சங்கத்திலும் —

உரும்பராய் பிரிவில் காலை 10.00 மணிக்கு இருபாலை பாரதி சனசமூக நிலையத்திலும் —

18 ஆம் திகதி தொல்புரம் பிரிவில் காலை 10.00மணிக்கு தொட்டிலடி லக்கி சனமூக நிலையத்திலும் —

உரும்பராய் பிரிவில் காலை 10.00 மணிக்கு கோப்பாய் தெற்கு முனி கோவிலடியிலும் —

21 ஆம் திகதி உடுவில் பிரிவில் பிற்பகல் 3.00 மணிக்கு இணுவில் கலாஜோதி சனசமூக நிலையத்திலும் —

22 ஆம் திகதி சண்டிலிப்பாய் பிரிவில் பிற்பகல் 3 00 மணிக்கு கட்டுடை சைவ வித்தியாசாலையிலும் —

கரவெட்டி பிரிவில் காலை 10.00 மணிக்கு மத்தொனி கலைவாணி அறிவாலயத்திலும் —

24 ஆம் திகதி புலோலி பிரிவில் பிற்பகல் 3.00 மணிக்கு அல்வாய் சின்னத்தம்பி பாடசாலையிலும் —

சாவகச்சேரி பிரிவில் காலை 9.00 மணிக்கு கல்வயல் சனசமூக நிலையத்திலும் —

28 ஆம் திகதி நல்லூர் பிரிவில் காலை 10.00 மணிக்கு பொம்மைவெளி சனசமூக நிலையத்திலும் —

29 ஆம் திகதி கீரிமலைப் பிரிவில் காலை 10.00 மணிக்கு கல்லரை பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்திலும்—

கைதடி பிரிவில் காலை 10.00 மணிக்கு நாவற்குழி கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்திலும் —

புத்தூர் பிரிவில் காலை 10.00 மணிக்கு வாதரவத்தை பாடசாலையிலும் இப்பயிற்சி வகுப்புகளை நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாதாந்தம் தொடர்ச்சியாக நடைபெறவிருக்கும் இப்பயிற்சி வகுப்புகளில் சகல விவசாயிகளையும், கிராமிய உற்பத்திக் குழுக்களையும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செய்திக் குறிப்பின் மூலம் அறிவித்துள்ளது. (இ)

### சமாதானப்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யல் திசையும் மாற்றமில்லாது தொடரப்படும்.

வெளிநாட்டு முதலீடு உட்பட நாட்டின் எதிர்காலப் பொருளாதாரக் கொள்கை சம்பந்தமான பிரகடனம் ஒன்று விரைவில் வெளியிடப்படும். — என்றும் ஜனாதிபதி கூறினார்.

பதவிப் பிரமாணம் எடுத்த பின்னர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின் மையக் கருத்துக்களையே புதிய ஜனாதிபதி செய்தியாளர் மாநாட்டிலும் வலியுறுத்தினார்.

புதன்கிழமை நடந்த தேர்தலில் தமக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி கடந்த 17 ஆண்டுகளாக நாட்டில் புரையோடிப் போய்விட்ட ஊழலுக்கும் அதிகார துஷ்பிரயோகத்துக்கும் எதிராகக் கிடைத்த வாக்கு. இந்த வாக்கு தமிழ் போராளிகளுக்கும் கவனிக்க விரும்பும் மற்ற எவருக்குமே அளிக்கப்பட்ட ஒரு செய்தியாகும்—

இது அரசியல் வன்முறைக்கு எதிரான செய்தி. மைதிக்கான திட்டவட்டமான ஆர்வம்மிக்க செய்தி.

சமாதானத்தை அடைவது கஷ்டமான காரியம் என்பதும் எமக்குத் தெரியும்.

அதனால் நாம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை குறைத்து மதிப்பிடவில்லை — என்று ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார் (அ-உ-ஐ)

### பலத்த பாதுகாப்பு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாக பி. பி. ஸியின் கொழும்பு முகவர் ஜோர்ஜ் ஆனி தெரிவித்தார்.

பதவியேற்பு வைபவம் நடந்த மண்டபத்துக்குள் ஜனாதிபதி சந்திரிகாவின் உறவினர்கள், அமைச்சர்கள், ராஜாதந்திரிகள் என தெரிவு செய்யப்பட்ட சிலரே அனுமதிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் அனைவரும் கூட முழுமையான சோதனையின் பின்னரே அனுமதிக்கப்பட்டனர். (ஐ)

# கிராமிய வளர்ச்சித்திட்ட இருநாள் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், நவ. 13

கிராமியப் பாசறைத் திட்டத்தின்கீழ் கிராமிய வளர்ச்சித்திட்டப் பயிற்சிநெறி ஒன்று நேற்றும், இன்றும் கைதடி நாவற்குழி ஸ்ரீமகா விஷ்ணு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெறுகிறது.

விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறையின் கிராமிய பாசறை பகுதியினால் மேற்கொள்ளப்படும் இப் பயிற்சிநெறியில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாவீரர் நினைவுகூரல் நிகழ்வுடன் தலைமைத்துவம், வேலை வாய்ப்பு, விளையாட்டுத்துறை, கலை கலாசாரம் பற்றிய பயிற்சி நெறிகளை சாவகச்சேரி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆ. கணேசன், விளையாட்டுத்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. தி. அருணகிரிநாதர் ஆகியோர் நடத்தவுள்ளனர்.

இறுதி நிகழ்வாக தி. பூ. கோபாலசிங்கம், திரு. இ. கமலநாதன், திரு. இ. சபாநாதன், திரு. இளம்பரிதி ஆகியோருடைய கருத்துரைகளும் தொடர்ந்து பயிற்சியாளர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

### தமிழ் விழா

கொக்குவில் இந்துக் கல்லூரி தமிழ் மன்றத்தின் தமிழ் விழா கடந்த மாதம் 21ஆம் திகதி செல்வன் பிரேமானந் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்க் கலை பண்பாட்டுப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை, அதிபர் திரு. இ. மகேந்திரன், உட்பட மற்றும்பலர் உரை நிகழ்த்தினர். (க-111)

# மாலைதிவுக்கு சமீபமாக தாழமுக்கம்

கொழும்பு,நவ.13

தென் கிழக்கு அரேபியக் கடலில்—மாலைதீவுக்குச் சமீபமாக தாழமுக்கம் ஏற்பட்டுள்ளது.

அது பலமிழந்து மேற்கு அல்லது வடமேற்குத் திசை நோக்கி நகரக்கூடும் என வானிலை அவதானநிலையம் அறிவித்தது.

இதேவேளை நாட்டின்பல பகுதிகளிலும் வானம் முகில் கூட்டம் நிறைந்து காணப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.மாலை வேளையில் மழை பெய்யக் கூடும், (இ-ஐ)

# தமிழ் எம். பி. பதவியேற்பு

கொழும்பு, நவ. 13

மலையகத் தமிழரான இராமையா யோகராஜன் நாடாளுமன்ற உறுப்பினராக நாளை சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்பார்.

இ. தொ. காவைச் சேர்ந்த யோகராஜன், கடந்த பொதுத் தேர்தலில் ஐ. தே. க. பட்டியலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டார்.

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்பில் முன்னாள் அமைச்சர் வீரசிங்க மல்லிமாராய்ச்சி கொல்லப்பட்டதால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு, அடுத்து ஆகக்கூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற யோகராஜன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (உ-4)

### ஜனாதிபதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

ளுடன் பேச்சு நடத்துவதற்காக யாழ்ப்பாணம் வந்த அரச தரப்புக் குழுவின் தலைவராகவும் பாலபட்டபெண்டி செயற்பட்டிருந்தார். (இ-ஜ-4)

### ஆயிரத்து...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடன் மீளளிப்புக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களில் இதுவரை அதனை மீளப் பெற்றுக் கொள்ளாதவர்களும் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து இம்முறை மாவீரர் வாரத்தில் கடனை மீளப் பெற்றுக் கொள்ளமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மீட்புநிதிக் கடனை மீளப் பெறதெரிவு செய்யப்பட்டோரின்கடன்பத்திர இலக்கங்கள் உதவி அரச அதிபர் பிரிவு ரீதியாக அறிவிக்கப்பட்டுள்ளன. நல்லூர், யாழ்ப்பாணப் பிரிவுகளுக்கான இலக்கங்கள் வருமாறு:-

#### நல்லூர்
யா/ந/

| | | |
|---|---|---|
| 349 | 420 | 517 |
| 602 | 921 | 960 |
| 3408 | 3494 | 4091 |
| 5515 | 17 | 329 |
| 449 | 3263 | 4322 |
| 4747 | 4944 | 5052 |
| 5056 | 5751 | 239 |
| 344 | 526 | 634 |
| 2716 | 2744 | 4084 |
| 4238 | 4324 | 4587 |
| 318 | 787 | 1074 |
| 2071 | 3210 | 3718 |
| 3764 | 4685 | 4901 |
| 5075 | 48 | 72 |
| 196 | 230 | 472 |
| 1928 | 2390 | 3582 |
| 3934 | 4551 | 157 |
| 641 | 647 | 923 |
| 1564 | 2180 | 4082 |
| 4110 | 4323 | 4648 |
| 100 | 364 | 373 |
| 407 | 468 | 678 |
| 1431 | 4325 | 5162 |
| 5644 | 255 | 297 |
| 425 | 756 | 897 |
| 3445 | 4086 | 5319 |
| 5437 | 5791 | 49 |
| 321 | 324 | 984 |
| 1452 | 1493 | 3082 |
| 3514 | 4071 | 5893 |
| 38 | 53 | 363 |
| 557 | 702 | 970 |
| 3557 | 4662 | 4878 |
| 5877 | 414 | 1105 |
| 1478 | 2553 | 3374 |
| 3483 | 4745 | 5198 |
| 5331 | 5408 | 71 |
| 478 | 546 | 865 |
| 1145 | 1975 | 2334 |
| 3055 | 3677 | 5636 |

#### யாழ்ப்பாணம்]
யா/ யா/

| | | |
|---|---|---|
| 41 | 131 | 236 |
| 391 | 947 | 1732 |
| 2394 | 2624 | 3960 |
| 05 | 208 | 335 |
| 1941 | 2567 | 2803 |
| 2946 | 3509 | 4959 |
| 10 | 67 | 98 |
| 426 | 504 | 761 |
| 3194 | 3624 | 4367 |
| 132 | 332 | 342 |
| 404 | 542 | 595 |
| 2329 | 3161 | 4292 |
| 146 | 532 | 992 |
| 2639 | 3006 | 3386 |
| 3597 | 4032 | 4033 |
| 234 | 672 | 1164 |
| 2333 | 2941 | 3028 |
| 3143 | 3472 | 3736 |
| 154 | 455 | 486 |
| 784 | 808 | 890 |
| 1403 | 2519 | 2579 |
| 4827 | 43 | 130 |
| 630 | 645 | 656 |
| 1290 | 1311 | 2642 |
| 3026 | 4813 | 327 |
| 492 | 705 | 907 |
| 1254 | 1530 | 2144 |
| 3428 | 3729 | 4476 |
| 177 | 209 | 370 |
| 623 | 933 | 948 |
| 3666 | 4352 | 4501 |
| 4892 | 54 | 267 |
| 423 | 447 | 508 |
| 584 | 1497 | 2323 |
| 2337 | 3854 | 08 |
| 624 | 646 | 887 |
| 946 | 1767 | 2072 |
| 2590 | 3270 | 3349 |

ஏனைய பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்டோரின் கடன் பத்திர இலக்கங்கள் நாளை வெளியாகும். (உ-ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org